# நாட்டுக்கருடன் பதில்கள்



திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

விலை 200/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக் கருடன்
# பதில்கள்

**திக்கவயல் .சி. தர்மகுலசிங்கம்**

*ஆசிரியர். சுவைத்திரள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரப் பட்டியல்

1. நூலின் பெயர் :- நாட்டுக் கருடன் பதில்கள்.

2. நூலாசிரியர் :- சிதம்பரப்பிள்ளை, தர்மகுலசிங்கம்.

3. புனைப்பெயர் :- திக்கவயல் தர்மு

4. அச்சுப்பதிவு :- வணசிங்கா பிரிண்டர்ஸ்,
126/1 திருமலை வீதி, மட்டக்களப்பு

5. நூலாசான் முகவரி :-
திக்கவயல், அல்வாய் வடமேற்கு, அல்வாய்.
9, தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு.

6. வெளியிட்ட திகதி :-
*20.05.2005*

7. பிரதிகள்:- *1000*

8. விலை :- ரூபா *200/=*

9. பொருள் :- கேள்வி, பதில்.

10. இதில் உள்ள கேள்வி, பதில்களை யாரும் எடுத்தாளலாம்: இருப்பினும் நாட்டுக் கருடன் பதில்களில் இருந்து எடுத்ததாகக் குறிப்பிடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

'நாட்டுக் கருடன்' என்ற பதம் யாழ்ப்பாணத் தமிழன் சொல் லாட்சியில் கோழிக்குஞ்சைப் பிடிக்கும் பருந்தைக் குறிக்கும். கோழிக்குஞ்சு தாயுடன் மேய்ந்து கொண்டிருக்கும் போது தந்திரமாகப் பாய்ந்து குஞ்சொன்றைப் பிடித்துச் செல்லும் லாவகமே தனி. அதனையே நான் ஒரு நல்ல சொல்லாகக் கருதி எனது கேள்வி பதிலில் தலையங்கமாகப் போட்டுள்ளேன்.

கேள்வி – பதிலில் முன்னோடிகள் சிலருண்டு . சுதந்திரனில் குயுக்தியார் என்ற பகுதியில் சாதனை செய்த எஸ்.டி. சிவநாயகம் மகுடி என்ற பதில் மூலம் சாதனை செய்த சிரித்திரன் .சி. சிவஞானசுந்தரம் என்போர் இந்தத் துறையில் தமிழில் முன்னோடிகளாகத் திகழ்ந்து உள்ளார்கள். இதனால் கேள்வி, பதில் உலகம் எப்படி நேற்று இருந்தது என்பதை விளக்கும் முகமாக இரு கேள்வி பதில்களிலும் சிலவற்றை எடுத்து ஆண்டுள்ளேன். இது ஒப்பீட்டு அடிப்படையில் படிக்கும் மாணவர்கட்கும் உதவி செய்யும் எனக் கருதுகின்றேன்.

இந்தக் கேள்வி பதிலில் விரிவஞ்சிக் கேள்வி கேட்டவர்களின் பெயரைத் தவிர்த்து உள்ளேன். சுவைத்திரள் என்ற எனது நகைச்சுவைச் சஞ்சிகையில் நான் கொடுத்த கேள்வி – பதில் பகுதியே இன்று புத்தக வடிவில் வெளிவந்து உள்ளது.

சுவைத்திரள் என்ற நகைச்சுவை ஏடு மீண்டும் வெளிவரவேண்டும் என்பது பெரும்பாலானோரின் வேணவா. கண்டியில் நடைபெற்ற சரித்திரன் சுந்தர் நினைவு விழாவில் கலந்துகொண்ட பேராசிரியர் துரை மனோகரன் கூட இதே கருத்தை வலியுறுத்தினார்.

நாட்டுக்கருடன் பதில்கள் சுவைத்திரள் என்ற சஞ்சிகையை மீண்டும் வெளியிட நிதி திரட்டும் முயற்சியே. இதைச் சொல்வதால் எனக்கு வெட்கம் எதுவும் இல்லை

இந்த நல்ல முயற்சியைத் தமிழுலகம் ஏற்கும் என எதிர்பார்த்து எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்

**திக்கவயல் .சி. தர்மகுலசிங்கம்**
**ஆசிரியர். சுவைத்திரள்**
20-04-2005.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவை எழுத்துக்களும் வடிவங்களும்

இயல், இசை, நாடகம் எங்கும் நகைச்சுவை விரவிக் கிடக்கின்றது. எனவே நகைச்சுவை எங்கேயுள்ளது என்பதை எல்லாம் கூறுவது கடினமானது. மக்களை மகிழ்விக்கும் கலையில் மிகவும் கடினமானது நகைச்சுவை. இவை நீண்டு போனால் நகைச்சுவையை ரசிப்பவர் பொறுமையை இழப்பர். அதனால் நகைச்சுவை தனது இயல்பினை இழந்துபோகும்.

சிவபுராணம் பாடப்படும்போது ''நமச்சிவாய வாழ்க ''எனத்தொடங்கும். கால்கடுக்க நின்று பாடும் மாணவர்கள் மகிழ்ந்து தமது ஒலியை உரக்கப் பாடுவது ''பல்லோரும் ஏத்தப்பணிந்து'' என்ற வரிகளையே! தமது பாரம் இத்துடன் முடிகின்றது என்ற மன உணர்வு அங்கே தென்படுகின்றது. விருந்தினர் மூன்று நாளைக்கு என வரையறை செய்யப்பட்டதும் இந்த அடிப்படையிலேயே!

நகைச்சுவையின் மூலம் சமுதாயத்தில் நாம் கண்ட குறைகளைச் சுட்டிக்காட்ட வேண்டும். வெறும் அங்க அசைவுகளோ வாழைப் பழத்தில் வழுக்கி விழுவதோ நகைச்சுவை அல்ல. வாழ்வில் வாழ முடியாத ஒருவன் அல்லது ஒருத்தி செயல்படும் விதம் கூட நகைச்சுவை அன்று. அது நகைச்சுவை என்ற எல்லையைக் கடந்த தனிப்பட்ட நையாண்டியாகி விடும். பணவசதி உள்ளவர்கள் பணவசதி அற்றவர்களை இழிவாக நோக்குகின்றார்கள். எனவே பணவசதி அற்றவன் பணவசதி கொண்டவர்களை எவ்வாறு நோக்குவான்? அவன் (பணக்காரன்) தனக்கு உதவிசெய்யாவிடின் அவரை ராஜா என்றோ கூஜா என்றோ நோக்கத்தலைப்படமாட்டான். ஏழையும் பணக்காரனை பல்வேறு விதமான முறைகளில் ஒப்பிட்டுக் கேலி செய்யவே பார்ப்பான். இந்த அணுகு முறைகளில் ஒரு சமதர்மப்பாதையைப் புகுத்திச் சிரித்திரன் வெற்றி பெற்றது. அவ்வாறான சில நகைச் சுவைகளை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகின் றேன். ஒரு கொழுத்த சீதனம் வாங்கிய மாப்பிள்ளை ரோட்டைக்கடந்து போகின்றார். அப்போது உட்கார்ந்த நிலையில் ஒரு பிச்சைக்காரன் சொல்கின்றான் ''டேயப்பா... வேண்டின லட்சம் சீதனத்திலை ஒரு ஐம்பது சதம் எறிந்து விட்டுப்போ''.....சீதனம் வாங்குவது ஒரு முற்போக்கு அல்ல என்பதே நகைச் சுவையின்


சிரித்திரன் ஆசிரியர்
வரைந்த குதம்பல் சித்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்ளடக்கம். ஆனால் அதனைச் சுட்டிக்காட்டும் பாத்திரம் வறுமைக்கோட்டில் உள்ளது. அப்பாத்திரம் மிகுந்த சீதனம் வாங்கிய அந்த நபரை உயர்வான தமிழில் கூட விழிக்காது பேசுகின்ற ஒரு நிலையைக் காணலாம். இதன் உள்ளுறை உவமத்தை நீங்களே உணர்ந்து கொள்ளலாம். இன்னொரு சந்தர்ப்பத்திலே இதே பிச்சைக்காரன் தான் நாலுநாளாகச் சாப்பிடவில்லை என்றும் அதற்காகப் பணம் தருமாறும் வீதியில் போகும் தடித்த உருவம் கொண்ட பணக்காரனைக் கேட்கின்றான். அவனோ தானும் 4 நாளாகச் சாப்பிடவில்லை என்றும் சாப்பிடவேண்டாம் என டாக்டர் கூறியதாகவும் கூறுகின்றான். இங்கே பொருள்முதல் வாதக் கருத்துக்கள் கேலியாக்கப்பட்டன. இவ்வாறான இருவேறு துருவங்களை உருவாக்கிய அரசாங்கத்தையும் மறைமுகமாகச் ''சிரித்திரன்'' நகைச்சுவை ஏடு கேலிக்குரியதாக்கியது.

இலக்கியத்திலே பல்வேறு விதமான அணுகுமுறைகள் உண்டு. மார்க்சீய அணுகுமுறை, சோக்கிரட்டீஸ் அணுகுமுறை தெய்வீகக் கோட்பாடு அழகியல்முறை என்று அவை பலவாகும். இவ்வாறான அணுகுமுறைகள் நகைச்சுவை இலக்கியத்தில் இல்லாவிடினும் சில கோட்பாடுகளைச் 'சிரித்திரன்' உருவாக்கியது. அக்கோட்பாடுகள் இனம் காணப்படாமையால் விமர்சனத்தில் எழுதப்படவில்லை.

சிரித்திரன் வளர்த்துவிட்ட இந்நகைச்சுவைக் கலைவடிவங்களில் மொழிப்புலமை அணுகுமுறை, கலாசார அணுகுமுறை, கவிதை அணுகு முறை, ஒப்புவமை அணுகுமுறை, கேள்விபதில் அணுகுமுறை, குரு சிஷ்யமுறை, நவீன அணுகுமுறை, பாலியல் முறமை என்பவை பிரதான மானவை. இந்த அணுகுமுறைகளை இனம்காண முடியாதவர்களில் பலருக்காகவே கேள்வி - பதில் என்ற அணுகுமுறையைச் சிரித்திரன் சி.சிவஞானசுந்தரம் தேர்ந்தெடுத்தார்.

### சிரித்திரனின் அணுகுமுறைகள் மொழியியல் அணுகுமுறை

மொழிப்புலமை கருத்துப் புலமையுடன் சேர்ந்தால் மொழிநடை ஊடகமாகவும், கவிதை ஊடகமாகவும் கருத்துச் செறிவுமிக்க நகைச்சுவையை உருவாக்கலாம்.

பழம்பெரும் ஓவியரான மைக்கல் ஆஞ்சலோ தனதுமுதுமை வாழ்க்கையைப் பற்றிப் பின்வருமாறு மொழியியல் நகைச்சுவை ததும்பக் கூறியுள்ளார். இந்தக் குகையில் வாழ்கின்ற எனது தொண்டையில் ஒரு கட்டிவளர்கின்றது. லொம்பார்டி அருவி இடுக்குகளில் இருந்து பூனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கி வருவதுபோல? உடுத்தியிருக்கும் ஆடை வயிற்றுக்குக் கீழே நழுவுகின்றது. என் கால்கள் முன்னுக்கும் பின்னுக்கும் அசைவதால் தொடைகள் சுருங்கி விரிகின்றன. அலங்கோலமாக வளர்ந்திருக்கும் எனது தாடி சொர்க்கத்தை நோக்கி நிற்கின்றது. தலையில் கட்டிய துண்டு முதுகில் அவிழ்ந்து விழுகின்றது. எனது நெஞ்செலும்புகள் மண்வீணையைப் போல வளைகின்றன. தூரிகையிலிருந்து தெறிக்கின்ற சிறிதும் பெரிதுமான வர்ணத்துளிகள் என் முகத்தில் கோலங்கள் போடுகின்றன"

இம்மொழியியல் தன்மைகளையும் நகைச்சுவைகளையும் கல்கி நன்கு உணர்ந்திருந்தார். ஒரு பார்ப்பனர் குளத்தில் வீழ்ந்து விட்டார். அந்தச் செய்தியை இன்னொரு பார்ப்பனர் குப்பன் என்ற வேலைக்காரன் மூலம் அந்தப் பார்ப்பனர் வீட்டுக்குச் சொல்லிவிட முயல்கின்றார். ''திருவடியார் திருக்குளத்தில் திருமுழுக்காடியபோது திருப்பாசி வழுக்கவே திருக்குளத்தில் விழுந்தார்'' என்று குப்பா நீ சொல்லு எனப் பார்ப்பனர் கூறுகின்றார். குப்பன் போகின்றான். தான் சொன்ன விசயம் குப்பனுக்கு விளங்கிவிட்டதோ எனப் புரியாத பார்ப்பனர் குப்பனைக் கூப்பிட்டு நான் சொன்னது யாதோ என வினாவுகின்றார். குப்பன் ''கும்பகோணத்துப் பார்ப்பான் குட்டையில் வீழ்ந்தான்'' என்று சொல்கிறேன் என நகைச் சுவையாகக் குறிப்பிடுகின்றான். இம்மொழியியல் வடிவங்களைப் பல கோணங்களில் ''சிரித்திரன்'' நகைச்சுவைக்காகப் பயன்படுத்தியுள்ளது. குதம்பல் சித்தர், புலவர் பெருமான், மிஸிஸ் டாமோடிரன். மகுடியார் என்ற பகுதிகள் மொழியியல் அணுகுமுறையால் சிரித்திரனுக்கு வெற்றியை ஈட்டித் தந்தன. ''நாலுபக்கமும் கடல் சூழ்ந்தது எம் நாடே கடல்மீன் இறக்குமதி செய்வதும் நம்நாடே'' என குதம்பல் சித்தர் கூறுகின்றார். மேற்படி நகைச்சுவை என்னால் எழுதப்பட்டதும் 1981ம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்த இதயம் பேசுகின்றது ஆசிரியர்மணியன் அதைத் தனது பத்திரிகையில் மறுபிரசுரம் செய்ததும் குறிப்பிடத்தக்கது. தாம் எடுத்துக் கொண்ட பாத்திரத்தைச் சித்திரத்தில் தத்ரூபமாகக் காட்டும் வல்லமை சிரித்திரனுக்கு இருந்தது அது கார்ட்டூன் ஓவிய உலகில் சிரித்திரனுக்கே உரிய தனிப் பண்பு.

**''வேலி படர்ந்த மண்மேலே**
**ஹெலி பறக்குது மானே**
**காற்றாடி சுழல்வதனாலே**
**தென்றல் வீசும் தானே''**

இது ஒரு புதிய கவிதை. யாழ்ப்பாணத்தில் 'ஹெலி'களின் வருகையைத் தொடர்ந்து நகைச்சுவையாகப் புலவர்பெருமான் பாடிய கவிதை இது. இக்கவிதையின் நகைச்சுவை மொழியியலின் உருவத்தையே குறிக்கின்றது.

மொழியியலில் உயர் நடை, இழிசனர் நடை என இரு பகுதிகள் உண்டு. பெர்னாட்ஷா தன் நாடகத்தில் தாழ்ந்த குடியில் பிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்கையொருத்தியை அழகான ஆங்கிலம் பேசிப் பழக்கி உயர் குடியில் சேர்த்துவிடுகின்றார். (ஒரு மொழியின் மேற்படும் தன்மை குடியின் தன்மையை விளக்கி நிற்கும்.) நாம் தமிழராக வாழ்ந்தும் எம்மில் சிலர் தமிழை விளங்க முடியாத ஆங்கிலத்தின் ஆதிக்கத்தில் தமிழ்க்கலாசாரத்தை மறந்து கொழும்பில் வாழ்ந்தனர். அவர்களை காட்டுவதாகச் சிரித்திரன் ஆரம்பித்த மிசிஸ் டாமோடிரன் என்ற பகுதி அமைந்தது. ''வட் இஸ் சங்கம்'' எனக் கேட்கும் மிசிஸ் டாமோடிரனுக்கு மிஸ்டர் டாமோடிரன் ''அது நம்மநாட்டு கூட்டுறவுச் சங்கம் போல ஒன்று எனப் பதிலளித்தார். இந்நகைச்சுவைகள் மொழியியலுடன் கலாசாரம் கலந்தமையால் மாபெரும் வெற்றியை ஈட்டிக்கொண்டது.

மொழியியலின் கடைசி ஆயுதமாக மகுடியைச் ''சிரித்திரன்'' பயன்படுத்தியது. அது நகைச்சுவையை மாத்திரம் அன்றி மொழியியலின் ஊடாகச் சீர்திருத்தத்தையும் புகுத்தியது. வாழ்க்கை என்றால் என்ன என ஒருவர் கேட்கின்றார். அதற்கு மகுடி ''இன்னலும் கன்னலும் சேர்ந்த பின்னலாகிய மின்னல்'' எனப் பதிலளித்து மொழியியலிலும் தனது புலமையை எடுத்துக் காட்டினார்.

ஆயினும் இவை எழுதப்பட்ட காலத்தில் அத்தகைய கோட்பாடு ஒன்றில் கீழ் இயங்குவதாகச் ''சிரித்திரன்'' நினைக்கவில்லை. இவை ஆராய்ச்சி என்ற உலைக்களத்தில் இட்டபோது எனக்குத் கிடைத்த தரவுகளே! நல்ல ஒரு விமர்சகரான திரு. புலோலியூர் சதாசிவம் அவர்கள் கூறியுள்ள சில கருத்துக்கள் இங்கே நினைவு கூரத்தக்கன.

''கலைகளின் பண்பு பணியாற்றிய நுட்பங்களைக் கற்காமலேயே கலைஞர்கள் கலைகளைப் படைப்பதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இதுவே கலையின் தனிச்சிறப்பு. கலைகள் யாவும் மனித அனுபவங்களின் தொகுப்பு; வாழ்வியலின் வெளிப்பாடு.''

## தற்பாதுகாப்பு அணுகுமுறை

நகைச்சுவையில் மறைமுகமான தற்பாதுகாப்பு முறை ஒன்று உள்ளது. ஒருவர் இன்னொருவரைப் பார்த்து ''அண்ணை தங்கராசன் சொல்கின்றான் நீங்கள் கள்ளன்'' என்று கூறுகின்றார் என வைத்துக்கொள்வோம். இங்கு கூறியவரின் கூற்றில் தங்கராசா ஒரு தற்பாதுகாப்புக் கேடயமாகவே பயன்படுத்தபபட்டுள்ளார்.

இந்த மறைமுகத் தற்பாதுகாப்பு முறைகளின் ஊடாகச் சமுதாயம் சீரழிவதை ''சிரித்திரன்''அவதானித்தது. இதனால் அந்தக் தற்பாதுகாப்புக் கேடயத்தையும் அது சமுதாயச் சீர்திருத்தத்துக்காகவும் பயன்படுத்தியது. ஒரு பணக்காரி தனது பிள்ளைகளில் ஒருத்தியைப் பார்த்துச் சொல்கிறாள், ''ஸ்கூல்......ஸ்கூல் என்று செல்கின்றாயே ஒன்றும் படித்ததாகத் தெரியவில்லையே'' என, மகள் கூறுகின்றாள் ''நீங்கள் ஷொப்பிங்''என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓடுகின்றீர்களே ஷொப்பிங் ஒன்றும் செய்த தாகத் தெரியவில்லையே"

ஒரு பால் வியாபாரி இன்னொரு வியா பாரியை பார்த்துக்கேட்கின்றான் 'உமது பாலில் தண்ணீர் கலந்து இருந்ததே' என்று! அதற்கு மற்றவன் கூறுகின்றான் 'நான் கடவுளிற்குக் கொடுக்கும் பாலில் மாத்திரம்தான் தண்ணீர் கலப்பேன்'தற்பாதுகாப்பு முறை இந்த நகைச் சுவையில் கடவுளையே ஏமாற்றும் முறைக்கே மாறிவிட்டதை அவதானிக்கலாம்.

மகுடியும் தனது பதில்களில் இந்தத் தற் பாதுகாப்பு முறைகளை நன்கு பயன்படுத்தி யுள்ளார். மனிதன் என்ன செய்கின்றான் எனக் கேட்ட கேள்விக்கு அவன் கொட்டாவிவிட்டு காற்றை அசுத்தப்படுத்துகின்றான் என நகைச்சுவையாகக் கூறினார். இங்கு மனிதன் எனப் பொதுப்படையாகக் கூறி மனிதனிடமிருந்து மகுடியார் தப்பிவிட்டார். ஆண்களின் பலவீனம் எது எனக்கேட்கப்பட்டபோது 'மனைவி விட்டு மனைவி தாவல்' என்றார். இப்படிப் பல.

## மனவேறுபாட்டு நகை அதிர்வு

ஒரு மனிதன் தனது இயல்பான குணநலன்களில் இருந்து பிறழும்போது நகைச்சுவை பிறக்கும், மனமாற்றம், மதமாற்றம், குணமாற்றம், என்பன நகைச்சுவை வடிவிற்குக் கைகொடுக்கும். கம்பராமாயணத்தில் இராமன் முடிசூடும் செய்தியைக் கைகேயிக்கு முதலில் அறிவித்தவள் கூனி. இந்தச் சந்தோசமான செய்தியை அறிவித்ததிற்காகக் கைகேயி தனது முத்துமாலையைக் கழற்றிக் கூனியின் கழுத்தில் போடுகின்றாள். ஆனால் கூனியோ இவளின் கருத்தை ஏற்காது கைகேகியின் மனத்தை மாசுபடுத்திவிடுகின்றாள். அதன்பின்பே பரதன் நாடாளவும், இராமன் காடேகவும், தசரதன் உயிர்பிரியவும் காரணிகள் பிறக்கின்றன. எனவே உலகில் கொடும் விஷங்களில் ஒன்றான மனவேறுபாட்டை நகைச்சுவை தனது வடிவமாக ஏற்கலாம். சிரித்திரனில் என்னால் எழுதப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டு வெளிவந்த நகைச்சுவை ஒன்று இவ்வாறே பின்னப்பட்டது.

ஒருவர் :- உங்கள் மகளை முறைமச்சானுக்குக் கல்யாணம் செய்து கொடுக்கப் போகின்றீர்களாமே?

பெண்ணின் தந்தை:- அந்தக் காவாலிக்கு எனது மகளைக் கொடுப்பேனோ?

ஒருவர் :- அவருக்குச் சுவீப்பில் முதல்பரிசு விழுந்திருக்கே?

பெண்ணின் தகப்பன்:- என்ன இருந்தாலும் அவன் முறை மச்சான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்திரன் ஆசிரியர் கீறிய சவாரித்தம்பர் பகுதியிலும் குடும்ப நகைச்சுவை ஊடாக இந்த மனமாற்ற அதிர்வுகள் வருகின்றன. ஒரு தாய் ஆமியில் வேலை செய்யும் ஒரு ஆணை மணமகனாக ஒரு பெண்ணுக்குத் திருமணம்செய்வித்தார். அப்பெண்ணின் தாய் 'ஆமி' எனத்தெரியவந்ததும் ஒப்பாரி வைப்பதும், பின்பு அந்த ஆமி மாப்பிளைக்கு அறுபதுரூபாச் சம்பளம் என அறிந்ததும் அவள் அமைதியடைந்து விடுகின்றாள். இக்கார்ட்டூன் 60ம் ஆண்டில் வெளிவந்தது.
(மகுடியும் இத்தன்மைகளைத் தனது பதில்களில் புகுத்தியுள்ளார்.)

## குணவேறுபாட்டு நகைச்சுவைகள்

மனவேறுபாட்டினைப் பார்த்தோம். குணவேறுபாட்டினை இப்போது பார்ப்போம். உடலும், உள்ளமும் நலம்தானா எனக் கண்ணதாசன் ஒரு பாடலிலே பாடுகின்றார். உடலும், உள்ளமும் வேறு, உடல் வேறுபட்டால் உள்ளம் வேறுபடும். உள்ளம் வேறுபடின் முற்றாகக் குணமும் வேறுபடும். இதனைத் தெளிவாக வாசகர்கள் உணரவேண்டும். கைகேகியின் மனம் வேறுபட்டது கூனியால்! ஆனால் அவளின் குணம் அப்படிப்பட்டது அல்ல. நிலையான குணத்தை மனவேறுபாடு மூலம் மாற்றலாம் என்ற கொள்கை மூலம் மாற்றியவள் கூனி.

உலகத்தின் கொடுமைகட்கு எல்லாம் மூலகாரணமானது குணவேறுபாடு. செம்மீன் என்ற மலையாளப் படம் பார்த்தபோது அந்தக் கதையின் பிரதான பாத்திரம் ஒன்று ஏழையாக இருந்த போதும் பின்பு வள்ளம், வலை, பணம் எனப்புரள இரண்டாந்தாரம் தேடிப்பிடித்த போது அவனிடம் கண்ட வேறுபாட்டைத் திகழி சிவகங்கரம்பிள்ளை எழுதியதை விடப் படத்தில் காட்டிய போது குணவேறுபாடுகள் நன்கு பிரதிபலித்தன

சிரித்திரன் ஆசிரியர் கீறிய சவாரித்தம்பர் பகுதி யிலும் குண வேறு பாடுகள் இயற்கையாகப் பிரதிபலித்தது.






வட்டிக்குப் பணம் கொடுத்த ஷைலொக்கின் கதை குணவேறுபாட்டின் உச்ச கட்டத்தை உலகத்திற்கு வெளிக் கொணர்ந்து காட்டும் அழகான கட்டம்!

குணவேறுபாட்டு நகைச்சுவைகளை ஆங்கில ஆர்ட்டிஸ்களைவிடப் பேசாத சித்திரங்களாக வரைந்து காட்டி ஒரு புதுமையை வரவழைத்த சிரித்திரன் சிவஞானசுந்தரம் ஆயிரக்கணக்கான வாசகர்களைச் சிரிக்க வைத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அந்த முறையைப் பின்பற்றுவது சற்றுக் கஷ்டமானது. ஏனெனில் அந்தச் சிரிப்புச் சிந்தனைகள் தத்துவத்துடன் கலந்தவை. உள்ளத்தில் உண்மை ஒளி இல்லாவிடின் அத்தகைய சித்திரங்களைத் தீட்டுவது கஸ்டமானது. அவர் வரைந்த பேசாத சித்திரங்கள் பொதுமக்களுடன் பேசுவதைப்பார்ப்போம்.

ஒரு குடும்பம் அங்கு பிள்ளைகள் இருவர், கணவனுக்கும் - மனைவிக்கும் கருத்தில் மாறுபாடும் வேறுபாடும் உண்டாகின்றது. பிள்ளைகள் தாய் பின்னால் நிற்கின்றார்கள். அப்போது தாய் பேசுகிறாள். பின்பு தாயின் குணவேறுபாட்டால் பிள்ளைகள் தகப்பன் பக்கத்தில் நிற்கின்றார்கள் அப்போது தாய் தலைகுனிந்து நிற்கத் தகப்பன் உரத்துப் பேசுவது காட்டப்பட்டுள்ளது.

இன்னொரு கார்ட்டூன். அந்தக் கார்ட்டூனில் ஒரு மதிப்புள்ள கனவானுக்கு அருகில் ஒரு 'றவுடி' நாணிக்கோணி நிற்கின்றான். அவரின் நட்புக்கிடைத்ததே பெரும் பாக்கியம் என அவர் நினைத்திருக்கக் கூடும். அடுத்த கார்ட்டூனில் அந்த 'ரவுடி' மரியாதை மிகுந்த கனவானின் கையைத் தொட்டுப்பார்க்கின்றான். மூன்றாவது கார்ட்டூனில் அந்த 'ரவுடி'மாரியாதை மிகுந்த அந்தக்கனவானின் தோளிலே கையைப் போடுகின்றான். நாலாவது கார்ட்டூனில் அந்த மரியாதை மிகுந்த கனவானுக்குக் கன்னத்தில் அடிக்கின்றான். 'ரவுடி' 'பழகப்பழக'என இக் காட்டூனுக்குத் தலைப்பிட்ட சிரித்திரன் சி.சிவஞானசுந்தரம் அவர்கள் இந்தக் கார்ட்டூன் மூலம் மிக உயர்ந்து நிற்கின்றார். அமெரிக்காவில் இருந்து வந்த சிரிப்பு சஞ்சிகை ஆசிரியர்களுக்கு இக்கார்ட்டூனைக் காட்டியபோது இதனை வரைந்தவர் அமெரிக்காவில் இருந்தால் ஒரே நாளில் பணக்காரராகிவிடுவார் என்றார். குணவேறுபாடு பற்றி எடுத்துக் காட்டுவதற்காக மேற்படி நகைச்சுவையை சிரித்திரன் ஆசிரியர் அதனைக்கீறினாரா என்பது பற்றி எமக்கு அது தெரியவில்லை. ஆயினும் எமது வகைப்படுத்தலின்போது தானாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது இடம்பிடித்துக்கொண்டது. குணவேறுபாடு நகைச்சுவைகள் மகுடியில் நிறைய உண்டு. உண்மைக்கணவன் விடும் தவறுகள் அவன் கட்டிய தாலி பாம்பு போல தவழும் மனோநிலையை மனைவியிடம் உண்டாக்கும் என மகுடி ஒரு முறை எழுதியுள்ளவை;- இவையும் இவைபோன்றனவற்றையும் மகுடியில் நீங்கள் கண்டு மகிழலாம்...
இவ்வாறன நகைச்சுவை வடிவங்களைப் பயன்படுத்தக் கற்றுக்கொண்டே நாட்டுக் கருடன் பதில்கள் நான் அளிக்கத் தொடங்கினேன் நாட்டுக்கருடன் பதில்கள் நகைச்சுவைப் பரிணாமத்தின் ஓர் எல்லை என்பது வாசகர்களின் கருத்து.

# கேட்டுப் பாருங்கள் குயுக்தி

கே: நீர் மேல் எழுத்து என்கிறார்களே அது என்ன?
ப: பொன்னம்பலம், குமாரசாமி ஆகியோரின் வாக்குறுதிகளுக்குதான் அப்படியும் ஒரு பெயருண்டு

கே: மூதூர்ப் பிரதிநிதி பாஷை விஷயத்தில் எப்படியிருக்கிறார்?
ப: காற்றாடியாகவிருக்கிறார்

கே: ஒரு பெண் எதை மறக்கிறாள், எதை வெறுக்கிறாள்
ப: படுக்கையறையிலிருக்கும் போது ஆஸ்பத்திரியை மறக்கிறாள்
ஆஸ்பத்திரியில் இருக்கும் போது படுக்கையறையை வெறுக்கிறாள்.

கே: தங்களிடம் யாருமே கேள்வி கேட்காவிட்டால் என்ன செய்வீர்கள்?
ப: அந்தக் கவலை எனக்கில்லை ஸ்ரீமதி குயுக்தியார் இருக்கவே "இருக்கிறார் ஏன் இவ்வளவு நேரம் லேட்" "எங்கே நான் கேட்ட பங்களூர் சேலை?" "சினிமாவுக்கு போவோமா?" இப்படி ஆயிரம் கேள்விகள் எனக்குக் கிடைக்கும்.

கே: செம்படவனின் வலை வீச்சுக்கும், கணிகையரின் கண் வீச்சிற்கும் வித்தியாசமென்ன?
ப: வலைவீச்சில் சிறுமீன்கள் அகப்படும் . கண்வீச்சில் முதலாளி முதலைகள் கூட அகப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே: குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்பது உண்மையா?

ப: இன்று மனிதன் என்பவன் நடந்துகொள்ளும் விதத்தைப் பார்த்தால் குரங்கு கூட அவமானப்படவேண்டியிருக்கிறது. ஆகையால் மேற்படி கூற்றை குரங்கு ஒப்புக் கொள்ளாது.

கே: ஐயா வெளவால் பட்சி இனத்தைச் சேர்ந்ததா?

ப: ஒத்துழைப்புத் தமிழர்கள் என்ற அரசியல்வாதிகளின் இனத்தைச் சேர்ந்தது, தம்பி

கே: பெண்களுக்கு காதல் அவசியமா?

ப: இல்லை. கணவன் தான் அவசியம்

கே: கற்பனையின் கடைசி எல்லை எது

ப: புராணம்!

கே: பெண்கள் அதரத்தில் செஞ்சாயந் தடவுவதேன்?

ப: அந்த இடத்தில் இருந்துதான் அபாயம் ஆரம்பிக்கிறது என்பதை காட்டுவதற்காக.

கே: தாதிக்கும் தாசிக்கும் உள்ள வித்தியாசம்

ப: தாதி நோயாளியைப் பராமரித்து சுகப்படுத்துகிறாள்; தாசி சுகவாளியை பராமரித்து நோயாளியாக்குகிறாள்.

---

இவை சுதந்திரன் பத்திரிகையில் எஸ்.டி. சிவநாயகம் என்பவரால் எழுதப்பட்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி பதிலில் புதுமை செய்த சித்திரன் மகுடியார்

கேள்வி என்பது ஒரு கலை வடிவமாகும். கேள்விகளை கேட்டுப் பார் என்ற தோரணையில் எந்த மூடனும் ஓராயிரம் கேள்விகள் கேட்கலாம். ஆனால் கேள்வியின் நோக்கத்தைத் திசை திருப்பும் வல்லமை, ஒரு சிலருக்கே உண்டு அந்த வகையில் இருபத்து நான்கு வருடம் பெரும் புரட்சி செய்தவர் மகுடியார் என்ற சி. சிவஞான சுந்தரம்.

பண்டைய கிரேக்கத்தின் சோக்கிரட்டீஸ், கேள்விகளுக்குத் கொடுத்த விடைகள்தான் அவருக்கு வரலாற்றிலும் இலக்கி யத்திலும் நீங்கா இடத்தைப் பெற்றுத் தந்தன.

விக்கிரமனின் வேதாளம் சொன்ன கதைகள் யாவும் கேள்விக்கு அவன் கொடுத்த கலைவடிவங்களே. விக்கிரமனின் சரியான பதில்களால் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய நிலை கேள்வி இலக்கியத்திற்கு கிடைத்த வெற்றி எனலாம்.

கேள்வி என்பது ஒரு அதிரடி போன்றது. கேள்வியின் போக்கினைச் சரியாக நாம் இனம் காணாதுவிடின், பதிலின் தரத்தில் ஒரு தத்துவக் கலைப்படைப்பைப் பதில் தருபவரால் தரமுடியவே முடியாது. ஔவையார் காட்டு வழியாகப் போய்க் கொண்டிருக்கிறார். ஔவைக்கிழவியைச் சோதிப்பதற்கு முருகன் நாவல் மரத்தில் ஏறி நிற்கிறார். களைத்து வந்த ஔவைப் பாட்டி அந்தச் சிறுவனிடம் நாவற்பழம் யாசிக்கின்றாள். முருகன் கேட்கிறான் "பாட்டி உனக்கு சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று.

"பழங்களுக்குள் சுட்ட பழமும் உண்டா? இந்தப் பையன் பாவம்.... சுட்ட பழமாகப் பார்த்து போடு."

முருகன் நாவல் பழங்களைப் பறித்து எறிகிறான். விழுந்த பழங்கள் மணலில் ஒட்டுகின்றன. அவற்றில் உள்ள மண்களை அகற்ற ஊதிச் ஊதிச் சாப்பிடுகின்றாள் ஔவை. முருகன் கேட்கிறான் :பாட்டி பழம் நல்லாச் சுடுகின்றதா?' என்று. கேள்வியை மட்டமாக நினைத்த ஔவை அங்கே தோல்வியை தரிசிக்க முடிகின்றது.

ஒரு கேள்விக்கு பதில் அளித்துக் தோல்வியடைந்த ஔவை இலக்கியத் தரத்தினை நிலை நாட்டுவதற்கு மூன்று கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டியதாயிற்று.

கேள்வி1: எல்லாம் அறிந்த ஔவையே பெரியது என்ன?
ஔவை: பெரியது கேட்கின் வரிவடி வேலோய் பெரிது பெரிது புவனம் பெரிது

கேள்வி1: ஔவையே அரியது எது?
ஔவை: அரியது கேட்கின் வரிவடி வேலோய் அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது; மானிடராய் பிறந்த காலையும் கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது.

கேள்வி1: ஔவையே உலகிலே கொடியது எது?
ஔவை: கொடிது கொடிது வறுமை கொடிது. அதிலும் கொடிது இளமையில் வறுமை.

சுருக்கமாகச் சொன்னால் எமது பண்டைய தமிழ் இலக்கியங்கள் யாவும் கேள்விக்கு விடை கண்டுபிடிக்கும் முயற்சியின் வெளிப்பாடுகளே.

பண்டைத்தமிழ் இலக்கி யத்தில் அம்மையப்பன் என்றால் என்னத் தந்தையைக் கேட்ட முருகனின் கேள்வி இன்று வரைக்கும் இலக்கிய வடிவத்துடன் திகழ்கின்றது. காரணம் முருகப் பெருமானின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி பொருள் பொதிந்ததாக இருந்தது தான்!

மகாபாரத்துக் கதையைக் கற்றோர் மற்றோரும் அறிவர். கதையை நினைத்தால் பீமனும், காண்டீபத்தை நினைத்தால் அர்ச்சுனனும் வருவதை யாரும் யாரும் மறந்துவிடமுடியாது வனவாசம் இருக்கும் பாண்டவர்கள் ஒருமுறை ஒருவர் பின் ஒருவராக நச்சுப் பொய்கை நீர் உண்டு மாண்டனர். தண்ணீர் குடிக்க சென்ற தன் சகோதரர்களைக் கணாது தேடிச் சென்ற தருமரும் நச்சுப் பொய்கை அருகே தன் உடன் பிறப்புகள் இறந்து கிடப்பதைக் கண்டார். உடனே அந்தச் சோக நிகழ்ச்சியினைக் காணச் சகியாத தருமர் மூர்ச்சித்துக் கீழே விழுந்தார். பின்பு ஒருவாறு மயக்கம் நீங்கி எழுந்த நின்ற போது அசரீரி கேட்ட கேள்விகளும் அவர் கொடுத்த பதில்களும் பாரதக் கதையில் நீங்கா இடம் பெற்றவை.

அசரீரி: உலகத்தில்டி சிறந்த நூல் எது?
தருமர்: பிற நூல்களில் அரிதான மெய்ப் பொருளைக் கூறும் வேதம்.
அசரீரி: இல்லறத்திற்கு இன்றி அமையாதது எது?
தருமர்: குணநலம் நிறைந்த இல்லாள்.
அசரீரி: பெரிய தவம் எது?
தருமர்: குல ஒழுக்கம் தவறாத வாழ்வே பெரிய தவம்
அசரீரி: தனவந்தர்களின் செல்வத்திற்கு காவல் எது?
தருமர்: தக்கோர்க்கு அவர் செய்யும் தானம்.
அசரீரி: செவிக்கு இன்பம் தருவது எது?
தருமர்: குழந்தையின் மழலை.
அசரீரி: உலகில் அழியாத பொருள் எது?
தருமர்: மன உறுதி.
அசரீரி: எந்தச் சாத்திரத்தைப் படித்து மனிதன் புத்திமான் ஆகிறான்?
தருமர்: சாத்திரங்களை படித்து மாத்திரம் ஒருவன் புத்திமான் ஆகிவிட முடியாது . பெரியோர்களை அடுத்தே புத்திமான் ஆகிறான்.
அசரீரி: தேசாந்திரம் யோகிறவனுக்கு யார் தோழன்?
தருமர்: அவன் கற்ற கல்வி.
அசரீரி: எல்லோராலும் விரும்பப்படுவன் யார்?
தருமர்: உள்ளத்தால் ஒழுகும் உத்தமன்.

இக்கேள்விகள் தருமதேவனால் கேட்கப் பட்டவை

பெண்ணின் கூந்தலில் இயற்கை மணமா செயற்கை மணமா என்ற சந்தேகக் கேள்வியே நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்ற மேன்முறையிட்டுக்கு அழைத்துச் சென்றது கேள்விகளை நீர் கேட்கிறார் அல்லது நான் கேட்கட்டுமா எனக்கேட்டு தருமிக்கு பொற்கிழி அளித்த கதையை அறியாதார் யார்? பரமசிவன் கொடுத்த பதில்கள் சிந்தனையைத் தூண்டு கின்றன.

கேள்வி: சொல்லக் கூடாதது?
பதில்: பெண்ணிடம் இரகசியம்
கேள்வி: சொல்லக் கூடியது?
பதில்: உண்மையின் தத்துவம்
கேள்வி: சேர்ந்தே இருப்பது?
பதில்: புலமையும் வறுமையும்

இவைகள் எல்லாம் திருவிளையாடல் திரைப்பட வசனங்கள் மாத்திரம் அன்று. சிந்தனையைத் தூண்டும் சிறு துண்டுகள்

கே: ஜனநாயகம் எப்படி இருக்க வேண்டும்?
ப: தாயின் மடி போன்று இருக்க வேண்டும். தாயின் மடியில் பிள்ளைக்கு உயர்வு தாழ்வு இல்லையே!
கே:பெரும்பான்மை, சிறு பான்மை உறவு எப்படி இருக்க வேண்டும்
ப: இராமர் பரதன் பாசம் போன்றதாக இருக்கவேண்டும்.
கே: மனிதன் தெய்வத்தின் நிலைக்கு எப்போது உயர்வான்?
ப: அவன் என்றோ உயர்ந்து விட்டான் தெய்வத்திற்கு அணியும் மாலையை மனிதனுக்கும் அணிகிறோம் இல்லையா?
கே: மனைவி எப்படிப்பட்டவளாக இருக்கவேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப:திருமணத்தின் போது அருந்ததி நட்சத்திரத்தைக் கொண்டு சத்தியம் செய்துவிட்டுச் சினிமா நட்சத்திரத்தைக் கணவனிலும் மேலாக மதிக்கக் கூடாது.

கே: இவ்வுலகில் எப்போது சமாதானம் நிலவும்?

ப: மூளையை இதயம் ஆட்சி செய்யும் காலத்தில்!

கே: உலக யுத்தத்தின் முடிவு?

தோற்றவன் சாம்பல்: வென்றவன் கரி.

கே: எப்படிப்பட்டவன் தலையில் இடி விழ வேண்டும்?

ப:கட்டிய மனைவியைக் கள்ளக் கடத்தலுக்குப் பயன் படுத்தும் கயவன் தலையில்.

கே: எது அபச்சாரம்?

ப: மதுசாரம், விபச்சாரம் உள்ள நாடு தனக்குக் கலாசாரம் இருப்பது என்று பேசுவது.

கே: அரவாங்கம் எதனை எதிர்பார்க்கக் கூடாது?

ப: விவசாயிகட்கு மானியம் கொடுக்காது, தானியம் எதிர்பார்க்கக் கூடாது.

கே: எது நன்றி கெட்ட செயல்?

ப: பாட்டாளிகளால் வாழ வைக்கப்படும் உலகம், பாட்டாளி களுக்குப் புரியாத இலக்கியம் படைப்பது

கே: மனிதன் எப்போது சிந்திக்கின்றான்?

ப: ஆஸ்பத்திரிக்குப் போகும் போது ஆரோக்கியத்தைச் சிந்திக்கின்றான். சிறை போகும் போதுநீதியைச் சிந்திக்கின்றான். மயானம் போகும் போது நிலையாமை பற்றிச் சிந்திக்கிறான்.

கே: தமிழ்க் கலைஞர்களின் எத்தகைய படைப்புக்களை நீர் விரும்புவீர்?

ப: சோகச் சாமத்தில் இருக்கும் தமிழ் மக்களுக்கு முகாரிக்கலை படைக்கக் கூடாது.

கேடு மகுடியாரே கொடியது எது

ப: விளைச்சல் காலத்தில் வறட்சி வாலிபத்தில் வறுமை. வயோதிபத்தில் வாதம்

தமிழக ஏடுகள் பரீட்சார்த்தம் செய்தும் வெற்றியடையாத துறை கேள்வி, பதில். ஆனால் சிந்தைத் தெளிவு மிக்க மகுடியார் இவ்விஷயத்தில் புதிய சிந்தனைகளை விதைத்து வெற்றி கண்டுள்ளார். நாம் இங்கு குறிப்பிட்ட கேள்வி பதில்கள் ஒரு சிலவே. எதிர் காலத்தில் நிலையாக வாழப் போகும் இலக்கியங்களில் சிரித்திரன் மகுடியாரும் ஒருவர். பல்கலை ஆராயும் ஆய்வாளர்கள் மகுடியாரை ஆராய்ந்து புத்தொளி ஊட்ட முன்வர வேண்டும்

கேள்வி பதிலில் புதுமை செய்த மகுடியையே நான் பின்பற்றிச் செல்கிறேன். இந்துக்களால் அழைக்கப்படும் வேதம் பகவத்கீதை. பாரதப்போரில் போர்க் களத்தில் உறவி னரைக் கண்டு பதைத்த அர்ச்சுனனுக்கு மனத்தின்கண் பலகேள்விகள், ஏக்கங்கள் படர்ந்தன. அதனைப் போக்க கிருஷ்ண பரமாத்மா கொடுத்த விடைகளே பகவத் கீதையாக மலர்ந்தது.

சிலப்பதிகாரம் படைத்த இளங்கோ அடிகள் மூன்று கேள்விகளைத் தனக்கு உள்ளே கேட்டு அதன் முடிவுகள் இப்படித்தான் இருக்கும் என முடிவு எடுத்துக் கொண்டார். இந்த மகத்தான காவியத்தின் படிப்பினையே இந்த மூன்றும் தான் அந்த மூன்று:

1. அரசியல் வழுவிய வேந்தனை அறக் கடவுள் கொல்லும்

2. புகழ் அமைந்த பத்தினியை வானோரும் ஏத்துவர்

3. ஊழ்வினை திரும்பிவரும்.

இந்த மூன்று கேள்விகளே ஒரு காவியத்திற்கு அத்திவாரம் ஆனால் உலக மாந்தர்களின் கேள்விகளுக்கு எல்லாம் விடையிறுக்கக்கூடிய புரட்சிகர புத்தி ஜீவியை எவ்வாறு அழைப்பது? இந்த நோக்கிலேயே சிரித்திரன் மகுடியை உலைக்களத்தில் இடவேண்டும் பரிவுடைய மனித உணர்வுகளால் உந்தப்பட்டுக் கேள்வி கேட்பவர் சிலரே. பதில் தருபவரின் கொட்டத்தை அடக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது கேள்வி கேட்பவர்களையும் ஆட்டிப் படைக்கும். இக்காரணம் பற்றியே கேள்வி கேட்பவர்களிடம் ஆத்திரம் அடையச் செய்யத்தக்கதாக ஒரு ஆங்கில அடி வழங்கி வருகின்றது. "நிமிர்ந்து நின்று எம்மைக் கேள்வி கேட்க முன்பு உங்களிடம் பரிவுடைய மனித உணர்வு உண்டா என்பதைக் காட்டுங்கள்."
*Prove that you have human feeling Are you proudly question ours*

எது எவ்வாறு ஆயினும் பிரச்சு னைகளைத் திசை திருப்பாத கேள்விகளை இனம் கண்டு முக்காலத்துக்கும் பொருந்தக் கூடியாதாகப் பதில் அளித்த சிலரில் ஈழத்தில் சிரித்திரன் மகுடி யாரும் அடங்குவார். அவரது இரண்டு தசாப் தங்களுக்கு மேற்பட்ட கேள்வி பதில்களில் இருந்து சில பகுதிகளைக் கிழே தருகின்றோம்
பண்டைய தமிழ் இலக்கிங்களில் பொதிந்து காணப்படும் கேள்வி, பதில் வடிவங்கள் அமரத்துவநிலை அடைந்து விட்டன. மகுடி யின் கேள்வி பதிலில் இழையோடியிருக் கும் நவீன தத்துவத்தை இனிப்பார்ப் போம்.

கே: இந்த உலகத்திற்கு எத்தனை திசைகள் இருக்கின்றன?
ப: பல திசைகள்; அதுதான் தமிழன் ஒற்றுமையின்றி ஒவ்வொரு திசை.
கே: இன்றைய சினிமா நடிகைகளின் இலட்சியம் என்ன?
ப: சிறு துணி பெரும் செல்வம்.
கே:எதற்கு உயிரில்லை
ப: பசிக்கு உயிரில்லை.
கே: எவன் வாழத் தெரியாதவன்?
ப:அயலையும் வயலையும் வெறுத்தவன்
கே: கற்றதனாலாய பயன் என் சொல்?
ப: அணு அறிவால் கொல்!
கே: உலகில் உயர்ந்த சங்கீதம் எது?
ப:அனாதைக் குழந்தையின்சிரிப்பொலி.
கே: அட்டமி நவமி பார்த்தோம்! எதனைக் கண்டோம்?
ப: அடையாள அட்டையை.
கே: ஹிட்லரின் அகம் எப்படி இருந்திருக்கும்?
ப: கெந்தகம்
கே: அயலவனை நாம் எப்போது நினைக் கின்றோம்?
ப: அவனுக்கு தொற்று நோய் வரும்போது!
கே: இலக்கியத்திற்குப் பாய்ச்சப்படும் மை எப்படி இருக்கவேண்டும்?
ப: மை மாணிக்க கங்கையாகப் பாய வேண்டும். அதில் வாசகன் தீர்த்தமாடிப் புனிதம் பெறவேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக் கருடன் பதில்கள் — பகுதி 01

**கே:அறிவுள்ள இரண்டு மனிதர்கள் அடிபடுவதைக் கண்டால் என்ன நினைப்பீர்?**

ப :அறிவுள்ள இரண்டு மிருகங்கள் அடிபடுவதைப் போல இருக்கும்.



**கே: விதி பிழைத்தால்?**

ப : மஞ்சள் கோட்டிலும் மரணம் வரும்.

**கே: பாணிற்கு கட்டுப் பாட்டு விலை இல்லை என்றால்?**

ப : எடை குறைய, விலை கூட மக்கள் நிலை தடுமாறும்.

**கே: கனடாவில் தமிழ்ப் பெண்கள் விவாகரத்தை அதிகம் விரும்புகின்றார்களாமே?**

ப : தமிழ் வாலிபர்களைக் குளிருக்கு உதவாத குணசீலன்கள் என நினைக்கின்றார்கள் போலும்.

**கே: மனிதனுக்கு நாலுகால் இருந்தால்?**

ப : மது அருந்தினால் ஆறு காலால் தவழ வேண்டிவரும். மதில், வேலி என்பன ஏறிக் குதிக்கும் போது பின் கால்கள் இரண்டும் இயமனாகவும் பின்னுக்கு வரும்.

**கே: மண் பற்றி 4 வசனம் எழுதுக?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப :மண் இல்லாது மரம் இல்லை. மரம் இன்றி விதை இல்லை. விதை இன்றி மனிதன் இல்லை. மனிதன் இல்லாவிடில் மானிடமும் இல்லை.

**கே: தமிழின் இலக்கணச் சிறப்பு ஒன்று சொல்?**

ப : அம்மா மெல்லினம்
அப்பா வல்லினம்
அம்மம்மா மெல்லினம்
அப்பப்பா வல்லினம்
போதுமா புதுமை?

**கே: நீங்கள் கடன் கேட்டு மூக்குடையும் போது என்ன நினைப்பீர்கள்?**

ப :அரசாங்கம் உலக வங்கியின் சொற்கேட்டு மூக்குடைவதை நினைத்து ஆறுதல் அடைவேன்.

**கே: நீலமயில் எனப் பெண்களை வர்ணிப்பது எதற்காக?**

ப :நீலக்கடிதத்தில் டொலராகப்பணம் வந்தால் நீலமயிலாக இருப்பாள் என்பதே.

**கே: நரசிம்மராவ் பற்றி ஒரு புதுக்கவிதை பாடும் கருடா?**

ப :சிரிக்காத பிரதமர் ஜப்பானில் சிரித்தார்.
இயந்தர மனிதனைக் கண்டு விழுந்து விழுந்து சிரித்தார்.
டில்லியிலிருந்து சிவகாசி வரை இயந்திரத்துடன்
போட்டியிட்டு வளைந்து விழுந்து எழுந்து விழும் பாலகத்
தொழிலாளரைக் கண்டு அழவில்லையே.!

**கே: ஈராக்கிய விதவைகளை மணக்க இந்திய ஆண்கள் விண்ணப்பிக்கின்றார்களாமே?**

ப : ஆமாம் காசிருந்தால் எல்லா வீடும் பெரிய வீடு தான்.

**கே: பணம் படைத்த தமிழன் என்ன செய்கிறான்?**

ப :மாடி வீடுவாங்கி ஹோட்டலாக்கி நாள் வாடகை எடுக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: ஒரு பத்திரிகையின் கடமை என்ன?**

ப : அன்னதானம் நடக்கும் இடத்தையும் காட்ட வேண்டும். அடக்குமுறை பற்றியும் சுட்டிக் காட்ட வேண்டும்.

**கே: மனிதனுக்கு மிருகக்குணம் உள்ளது ஏன்?**

ப : தாய்பாலுக்கு பதிலாக மிருகங்களின் பாலைத்தானே குடிக்கிறோம். அறு சுவை உணவில் இருப்பது அதன் மாமிசம். மிருகக்குணம் அன்றித் தேவர்குணமா அண்ணை எங்களுக்கு வரும்?

**கே: மானம் காக்கும் உடுப்பின் விலைகள் ஏறுகின்றதே?**

ப : பஞ்சு விளைவிக்கப் பஞ்சிப்பட்டு உள்நாட்டுத்தறியை மூடி, வெளிநாட்டுக் கைத்தறி என்ற பொறியில் அகப்பட்டால் நிலமை உப்படித்தான்.

**கே: கருடா காலிமுகத்திடலில் காதலிப்போர் குடைக்குள் இருந்து கொண்டு கடலைப்பார்த்துக் காதலிப்பது எதற்காக?**

ப : ஒரு குடையின் கீழ் ஆளப்படுவதாக அவர்கள் எண்ணு கின்றார்கள். அதை விடத் தமது காதலுக்கு சாட்சி கடல் என்பது அவர்கள் எண்ணம்.

**கே: தமிழ் மொழிக்கு இன்று தேவையானது என்ன?**

ப : வித்தியாசமான கருத்துக்கள். தெளிவான கருத்துரை நிமிர்ந்து நிற்கச் செய்யும் நேரான கருத்துரை. 'டபிள் மீனிங்' இல்லாத மொழி நடை.

**கே: கருடா யாழ்ப்பாணம் இப்போது என்ன நிலையில் உள்ளது?**

ப : மாலைவனம்.

**கே:தமிழன் இப்போது பெருமைப்படும் நிகழ்சி எது?**

ப : மார்பில் புரளும் சங்கிலியுடன் நான் கனடா அகதி, பிரான்ஸ் அகதி, டென்மார்க் அகதி, என சொல்லிப் பெருமைப்படுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: காசால் வாங்க முடியாத மூன்று சொல் இல்லையென்றால் உனதுதலை வெடித்துச் சிதறும்?**

ப : சொல்லுகிறேன் கேள்:

1. இறந்தவரை எழுப்ப முடியாது
2. கற்புள்ளவளை விலையாக வாங்க முடியாது
3. இலட்சியக் கனவு காண்பவனின் பேனாவை அடகாக வாங்க முடியாது.

**கே: இலங்கையில் தேசியம் வளராமைக்கு காரணம் என்ன?**

ப : குடிமனைக்குள் "ஷெல்" அடித்தால் தேசியம் வளருமோ?

**கே: உண்மையின் உயர்வு பற்றி உபதேசித்தால் அடி விழக்கூடிய இடம் எது?**

ப : வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஏஜன்ஸியில் பணம் கட்டிய பின்பு கதைத்துப் பார்க்கவும்.

**கே:பலாலி இராணுவமுகாமில் பெண்களுக்கும் இராணுவ வீரர்கட்கும் நடந்த கயிறிழுப்பில் பெண்கள் வெற்றி பெற்றார்களாமே?**

ப : இது ஒரு விட்டுக் கொடுத்த சங்கதியாக இருக்கும்.

**கே:நிலம் வாடகை உழைப்பதாகப் பொருளியல் கோட்பாடு சொல்வதை ஏற்பீரா?**

ப : உண்மையே. நிலத்துக்கு மேல் கட்டப்பட்ட பல அடுக்கு மாளிகையும், முதலாளிகட்குப் பணம் உழைத்துக் கொடுக்கிறதே!



**கே:மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம் என்ற பாரதியின் வாக்கு எப்படி உள்ளது?**

ப : மடமை எங்கே கொழுத்தப் படுகின்றது. மாதர் அல்லவா கொழுத்தப் படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே:ஊரில் உள்ள ஆண்கள் எல்லாம் வெளிநாடு சென்றால்?**

*ப :பாரில் அவர்களுக்கு என எழுதப்பட்ட பாவையரும் அங்கு செல்லப் பாஸ்போட் எடுப்பர்.*

**கே: யாழ்ப்பாணத்தில் காலம் மாறிக் கொண்டிருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்கின்றீரா?**

*ப :ஆமாம்.. இணுவில் சப்பறம் கனடா போகுது, கொம்படியில் ஒட்டோ வள்ளத்தில் போகுது, காலம் மாறாமலா நடக்கிறது?*

**கே: தமிழர்களின் பொருளாதாரம் அன்று எப்படி? இன்று எப்படி?**

*ப :அன்று மணியோடர் பொருளாதாரம் கொழும்பு To வட +கிழக்கு. இன்று ரெலக்ஸ் பொருளாதாரம் ஐரோப்பா To வட +கிழக்கு*

**கே: தமிழனின் அன்றைய பகைமை யாது இன்றைய பகைமை யாது?**

*ப :அன்று நடந்தது ஆரியப் பகைமை.*
*இன்று நடப்பது காரியப் பகைமை.*

**கே: வாழ்க்கையின் அவதிக்குக் காரணங்கள் என்னவோ?**

*ப :நான் எனக்காகக் நாம் எமக்காக நாங்கள் எங்களுக்காக என்ற காரணங்கள் சித்தாந்தமாகும் போது....*

# பாகம்- 01
# நிறைவுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டுக் கருடன் பதில்கள் — பகுதி 02

**கே:மட்டுநகர்ச் சாரய மரணங்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ப :வேலி பயிரை மேய்ந்த கதை இது கலால் திணைக்களங்கள் "புலால்" மேயத் தொடங்கினால் இப்படியல்ல........ இதற்கு மேலும்மரணங்கள் வரலாம்.அதன்பின்பு அரசாங்க அதிபருடன் நாங்களும் சேர்ந்து அழவேண்டியதுதான். மரித்தவன் எழுந்து வருவானோ மட்டக்களப்பு மாநிலம்?

**கே: பொருளாதார சிக்கலை அறுப்பதற்கு யாரை நாடலாம்? யாரை நாடக்கூடியது?**

ப : மனம்திறந்த பணக்காரனின் பணமுடையை நாடலாம், பிறரிடம் பணம் வாங்கிச் சிக்கலான பணமுடை கொண்டவனை நாடக்கூடாது.

**கே: கொழும்பில் யாருக்குப் பயப்பட வேண்டி இருந்தது; மட்டக்களப்பில் யாருக்குப் பயப்பட வேண்டியுள்ளது?**

ப : கொழும்பில் வெள்ளை வானுக்கு!
மட்டக்களப்பில் வெள்ளை மூடிச் சாராயத்துக்கு!!

**கே: ஒரு சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் வல்லமை கவிஞர்க்கு உண்டா?**


ப :தான் சார்ந்த கொள்கைக்காகப் பாடிவிட்டுத் தற்கொலை செய்தால் வரமாட்டாது.

**கே: எந்த நாடு விரைவில் முன்னேறாது?**

ப :கண்டுபிடிப்புக்களை விடக்குண்டு வெடிப்புகள் அதிகமாக உள்ள நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கே: இலங்கையில் அரசியல் தீர்வு முன்னேற்றமும், ஜயசிக் குறுவின் முன்னேற்றமும் முன்னோக்கிப் போகாமைக்குக் காரணம் என்ன?**


ப : இரண்டும் ௰3ம் இலக்கத்துடன் சம்பந்தப்பட்டமை தான்!

**கே: இலங்கை முன்னேற என்ன செய்ய வேண்டும்?**

ப : "ங்" என்ற எழுத்தை நீக்கிவிட்டு "க்" என்ற எழுத்துப் போட்டு அர்த்தமுடன் முன்னேறவேண்டும்.

**கே: பெரும் தொகை சீதனம் வாங்கியவனின் நிலை என்ன?**

ப : பல் இடுக்கில் சிக்கிய இரையை எடுப்பதற்கு முதலை கொக்கிற்கு விட்டுக்கொடுத்த கட்டம் தான் ஞாபகம் வருகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: சிட்டுக்குருவியை மக்கள் "LOVE" பண்ணுவது ஏன்?**
*ப : அதன் இறைச்சி ஒரு கிலோ எடைகூட வராது என்பதால்!*

**கே: சிவபொருமானைப் பார்த்துத் தருமி கேட்ட கேள்விகள் அத்தனையையும் உம்மைப் பார்த்துக் கேட்கப் போகின்றேன்! பதில் சொல்!**

**கே: பிரிக்கமுடியாதது?**
*ப : உண்மைக்காதல்.*

**கே: பிரியக் கூடாதது?**
*ப : சிரிப்பும் அழுகையும்.*

**கே: சேர்ந்தே இருப்பது?**
*ப :- பாலும் தண்ணீரும்.*

**கே: சேரக்கூடாதது?**
*ப :- விசமும் நீரும்.*

**கே: சொல்லக்கூடாதது?**
*ப : பொய்யான ரகசியம்.*

**கே: சொல்லக்கூடியது?**
*ப : சிரிப்பின் ரகசியம்.*

**கே: பார்க்கக் கூடாதது?**
*ப : மாமியின் வறுமை.*

**கே: பார்த்து ரசிப்பது?**
*ப : பலவீன அரசாங்கம்.*

**கே: கலையில் சிறந்தது?**
*ப : கவின்கலை .*

**கே: நாடகம் என்பது?**
*ப : நடிப்பை மறைக்கும் பாட்டு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: வில்லுக்கு? சொல்லுக்கு?**
ப : ஆளில்லை இன்று.

**கே: ஏழைகட்கு உதவாத பணக் காரனை எவ்வாறு வர்ணிக்கலாம்?**
ப : தென்றல் தழுவிய பிணம்.

**கே: உனது மனைவி எப்படிப்பட்டவளாக இருக்கவேண்டும்**
ப : ஊர்ப்புதினம் உள்வாங்கா உறுதிமிக்க இரு செவி மிக்கவளாக இருக்க வேண்டும்.

**கே: ஒரு தாய்க்கும் குருவுக்கும் என்ன வித்தியாசம்?**
ப : தாய் உணவு அளிப்பவள் !
குரு உணர்வு அளிப்பவர்!!

**கே: ஒரு தாய் எப்போது பட்சபாதகமானவளாக மாறுவாள்?**
ப : மூன்று குழந்தை பிறந்து எல்லாப் பிள்ளைகட்கும் ஒரே நேரம் பாலூட்ட முடியாத போது.

**கே: தாயா தாரமா மேலானவள்?**
ப : முந்தி வந்த செவியா, பிந்தி வந்த கொம்பா மேலானது?

**கே: ஒருவனிடம் பணம் புரளாவிட்டால் என்ன நடக்கும்?**
ப : மனம் புரண்டு கொண்டிருக்கும்!

**கே: ஒருவனுக்குச் சங்கீதம் வெறுப்பது எப்போது?**
ப : கடன்காரர்கள் நாலு திசையிலும் கலைக்கும்போது சங்கீதம் அமைதி தராது!


**கே: ஒருவன் தீங்கு செய்தால் அவனுக்கு நாம் தீங்கு செய்யலாமா?**
ப : நாய் காலைக்கடித்தால் நாம் அதன் வாலைக் கடிக்கலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: இலங்கையின் இனப்பிரச்சனையில் பெரும் பான்மை அரசியல் வாதிகள் என்ன நிலையில் உள்ளார்கள்?**

*ப : மதில் மேல் பூனை*



**கே: கருடா சைவ ஹோட்டல் சாப்பாடு பிடிக்குமா?**

*ப : கொட்டாஞ்சேனைக் ஹோட்டல் ஒன்றில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது ஏராளமான எலிகள் ஹோட்டலுக்குள் சுதந்திரமாகத் திரிகின்றதே? இந்த லட்சணத்தில் சைவச்சாப்பாடு சுவைக்குமோ?*

**கே: பல கடவுள்கள் உலகிற்குத் தேவையா?**

*ப : மாவில் மோதகம், வடையும் தோசையும் இடியப்பமும் வெவ்வாறாகத் தயாரித்தல் வேண்டுமா?*

**கே: உலகிற் பெரிய சமயம் எது?**

*ப : நாத்தீக மனை உளைவு .*

**கே:மட்டுநகர் எம்பீக்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?**

*ப : நாட்டுக்கோர் நல்லவன் ஆவதற்குப் பத்திரிகைகளில் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.*

**கே: ஒருவன் மறைவதற்கு முன்பு அவனை வாட்டுவன எவை?**

*ப : இளமையில் விட்ட இன்பப் பிழைகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: ஒரு பெண் கட்டுப்பாடு இன்றித் தனி வழி போனால் எப்படி இருப்பாள்?**

ப : ஒரு போல்பொயின்ற் பேனையின் மூடி கழன்றது போல் இருக்கும்.

**கே: இலங்கை அரசுக்குப் பிடித்த தமிழன் யார்? பிடியாத தமிழன் யார்?**

ப : *பிடித்த தமிழன் முத்தையா மகன், பிடியாத தமிழன் வேலுப்பிள்ளை மகன்*



*பிடித்த தமிழன்*



*பிடியாத தமிழன்*

**கே: யாரை நம்பலாம்? யாரை நம்பக்கூடாது?**

ப : ஓரம் போ எனச் சொல்பவனை நம்பு.
சோரம் போ எனச் சொல்பவனை நம்பக்கூடாது.

# பாகம்- 02
# நிறைவுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக் கருடன் பதில்கள் பகுதி 03

**கே: எவன் மனச்சாட்சி இல்லாதவன்**

ப : ஒருவன் இரத்தம் சிந்தும்போது அதற்காகக் கண்ணீராவது சிந்தாதவன்.

**கே: சக்தியா, சிவமா மேலானது?**

ப : மனைவி கோபித்தால் கணவன் தற்கொலை செய்கின்றானே இங்கே பதிலைத் தேடவும்.

**கே: கோழை எப்படி இருப்பான்? பணக்காரன் எப்படி இருப்பான்? (தத்துவரீதியான பதில் தேவை, சளாப்ப வேண்டாம்.)**

ப : கோழை பணத்துக்காக எழுந்து நிற்பான். ஏழை விவேகம் இல்லாத வீரனாக இருப்பான்.

**கே: தாய்க்குப் பின் தாரம். தாரத்துக்குப்பின்பு?**

ப : துலாபாரம்.

**கே: நீர் ரசித்த மிருகக்காட்சி ஒன்று கூறமுடியுமா?**

ப : கூறுவதென்ன சித்திரத்தில் வரைந்து காட்டுகிறேன். மழை காலத்தில் நாய் சுருண்டு நித்திரை செய்யும் காட்சி அழகான மிருகக் காட்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே: நீர் பணம் உழைப்பதற்காகத்தானே பத்திரிகை நடாத்துகின்றாய்?

ப : நீர் உமது பெயரைத் தட்டி எழுப்புவதற்காக தானே கேள்வி கேட்டுள்ளீர்.

கே: உங்கள் பத்திரிகைக்கு அதிக கடிதங்கள் எழுதி உற்சாகப்படுத்திய ரசிகர் யார்?

ப : ஜனாப் மசூத் அகமத் 90 மத்திய வீதி, காத்தான்குடி என்ற ரசிகர்.

கே: உதட்டில் ஒன்று பேசுபவனும் உள்ளத்தில் ஒன்று நினைப்பவனும்பற்றி ஓரிரு வரிகள் சொல் சொல்.

ப : உதட்டில் ஒன்று பேசுவது வருங்காலச் சாப்பாட்டிற்காக. உள்ளத்தில் ஒன்று நினைப்பது நேற்று ஏமாற்றித் திருடி உண்ட உணவுக்காக.

கே: அண்ணா வளர்த்த திராவிடர் காலாச்சாரம் இப்போது எப்படி உள்ளது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உயர்ந்துள்ளதா?

ப : கடமை காசின்மேல் வலை விரித்துள்ளது. கண்ணியம் வேட்டி உரிந்தது. கட்டுப்பாடு வேலிபாய்ந்து விட்டது.



கே: பாயும், தலையணையும் தரும் சுகம் உமக்கு எப்போது கசக்கும்?

ப : ரூபா100/-கேட்டு அது கொழும்பு லொட்ஜில் விரிக்கப்படும்போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: நாட்டில் தொடர்ந்து யுத்தம் நீடித்தால்?**

ப : வடகிழக்கு, தென் மேற்கு பேதம் இன்றி செயற்கைக் கால் தொழிற் சாலைகள் தோன்றும். துப்பாக்கியை ஊன்று கோலாகப் பாவிக்க முடியாது என்பதை இன, மத பேதம் இன்றி யாவரும் உணர வேண்டி வரும்.

**கே: இறைவனைக் கண்டால் நீ என்ன கேட்பாய் கருடா?**

ப : நீ படைத்த நிலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கோடிக் கணக்கான அப்பாவிகள் வாடகை ஏன் கட்ட வைத்தாய் தேவரீர் எனக் கேட்பேன்.

**கே: சங்ககாலக் காதல் வாழ்வு தமிழிலக்கியத்தின் தனிச்சிறப்பு என்கின்றேன். கருடா நீ என்ன சொல்கிறாய்?**

ப : பெண் பிள்ளைகள் பிறந்தால் எருக்கலம்பால் கொடுத்துச் சாகடிக்கும் நிலையும் இன்று தமிழ் நாட்டில் உண்டு என்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

**கே: மலை சாய்ந்து போனால்?**

ப : பள்ளம் நிமிரலாம்.

**கே: மனம் சாய்ந்து போனால்?**

ப : அங்கொடை, மந்திகை, வட்டுக்கோட்டை, முல்லேரியா போகலாம்.

**கே: ஒரு ஆணும் பெண்ணும் கதைத்துக் கொண்டிருந்தால் காணும் பெண் என்ன சொல்லுவாள்?**

ப : அந்த ஆணைப் பார்த்து உங்கள் மகளின் பெயர் என்ன என்று கேட்பாள்.

**கே: ஒருவன் ரயிலில் சீற் பிடிக்க ஓடினால் என்ன அர்த்தம்?**

ப : ரயிலுக்கு அவர் "சீற் புக்" பண்ணவில்லை என்பது அர்த்தம்.

**கே: கலைஞர்கட்குப் பணம் படைத்தோர் பொன்னாடை போர்த்துவது ஏன்? ஏன்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப : என்னைப் பற்றி, என் உறவைப் பற்றி முந்தி எழுதியது போக இனி எழுதாதே பிளீஸ் என்பதற்கு அணியப் படும் அடையாளச் சின்னம்.

**கே: ஒரு பெண் எப்போது தனிமையில் சிரிக்கிறாள்?**

ப : பல லட்சம் இனாம் வாங்கிய சிங்கக்குட்டி மாப்பிள்ளை முதல் இரவில் கொடுத்த முதல் முத்தத்தை எண்ணித் தனிமையில் சிரிப்பாள்.

**கே: லெனின் உடல் மண்ணுக்கு இரையாகப் போகிறது. இது பற்றி உமது கருத்து யாதோ?**

ப : இன்று நடக்கும் சோசலிஷத்தின் மறுபக்கம் இது. உழைப்பு உடலுக்குச் சொந்தம். உடல் மண்ணுக்குச் சொந்தம் என்கின்றார் ஜெல்ட்சின். சோசலிஷத்துக்கும் நவீனம் உண்டு.

**கே: மரங்களை வெட்டித் தறிப்பவருக்கு என்ன பெயர் வைப்பாய்? வெட்கப்படாமல் உடன் சொல்?**

ப : அனல் காற்றுக் குடிமகன்

**கே: உலகில் இலட்சக்கணக்கான மக்கள் மனிதனால் பலியாகின்றார்கள். இதற்காக இறைவன் ஏதாவது விதிவிலக்குச் செய்தானா? தத்துவப் பதில் சொல்?**

ப : .. இன்ன காரணம் பற்றியே நிலத்தை 1/3 ஆகவும், நீரை 2/3 ஆகவும் எல்லாம் வல்ல இறைவன் படைத்து நிலப்பகுதியில் பாலைவனங்களையும், மலைகளையும் உருவாக்கி மனிதர்களின் தொகையைஇறைவன் கட்டுப்படுத்தி உள்ளான்.

**கே: உமக்குப் பிடித்த புதிய கவிதை ஒன்று சொல்?**

ப : "கையெழுத்தும் தெரியாத விவசாயி வையகத்தின் தலைவிதியை வயல்வெளியில் எழுதுகிறான்" என்ற புதுக்கவிதை எனக்கு நன்கு பிடித்திருக்கிறது.

**கே: எல்லாம் தெரிந்ததுபோல், நடிக்கும் அரசாங்கம் எதனைச் செய்யக் கூடாது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப : நாடு முழுவதும் விதவைகளை உருவாக்கி விட்டுப் பின்பு சுயஉதவி செய்கின்றோம் எனக் கோழிக் குஞ்சுகளை வழங்கக் கூடாது.

**கே: கருடா சில அரசியல்வாதிகள் மேடையில் பேசும் போது வலக்கையை விரித்துப் பேசுவதேன்?**

ப : கிட்ட நிற்கும் வாக்காளர்கள் ஆயுள்ரேகையைப் பார்த்த பின்பாவது வாக்களிக்கலாம் எனக் கருதுகிறார்கள் போலும்.

**கே: கற்காலமா இன்றைய தொற்காலமா மேலானது?**

ப : கற்காலத்தில் துகிலுரி நடனங்கள் நடாத்தப் படவில்லை.

**கே: எத்தனையோ உலக மக்கள் குடியேறி வாழ அமெரிக்கர்கள் "கிறீன்-காட்" கொடுக்கிறார்கள் அவர்களின் நல்ல மனதை உள்ளபடியே வரவேற்பீர்களா?**

ப : அந்த நாட்டின் சுதேசியரான சிவப்பு இந்தியர்களை ஒதுக்கி வைத்துள்ளார்களே? இதை நீர் என்ன சொல்கிறீர்?

**கே: நாய் ஏன் குரைக்கிறது?.**

ப : பேசத் தெரியாமையால்.

**கே: இலங்கை முன்னேறாமைக்குக் காரணம் என்ன?**

ப : போர் முனைகள் முன்னேறிய அளவுக்கு ஏர்முனைகள் முன்னேறாமை.

# பாகம்- 03
# நிறைவுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக் கருடன் பதில்கள்

## பகுதி 04

**கே: காந்தியார் இன்றிருந்தால் எல்லா அரசியல் வாதிகளிலும் கூடுதலான மாலைகள் விழுந்திருக்கும் என்கிறேன்? கருடா என்னசொல்கிறாய்?**

ப : *மாலைகள் விழலாம், அதில் கோர்த்திருப்பவை பூவாக இருக்காது புஸ்பராணி !*

**கே: மட்டுநகர் ரயில் தினசரி சேவை ஆரம்பித்தால் ஓட்டமாவடியில் தண்டவாளம் “லூசாக” ஆரம்பிக்காதா?**

ப : *மட்டக்களப்பில் மழைபெய்தால் ஓட்டமாவடியில் தூவானம் அடிக்குமா?*

**கே: எனது கலாசாலையில் ஆசிரியரிடம் பாடத்தில் “டவுட்” கேட்டால் ரியூட்டரிக்கு வரும்படி அழைக்கின்றார். அதற்கு என்ன செய்யலாம்?**

ப : *முகுந்தா......... நீ அவர்வழியில் செல். அவர் உன்வழியில் வருவார். வெற்றி உனதே!*

**கே: பெண்களைப் பூவிற்கும் பேய்க்கும் ஒப்பிடுவார்கள்! இரண்டில் எதை நாம் ஒப்புக்கொள்ளலாம்?**

ப : *நஸீம்...... சொன்னவன் பெயரை முதலில் கூறுக. பதிலை ரகசியமாக அனுப்பி விடுகின்றேன்.*

**கே: அன்னைக்கும் ஆண்டவனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

ப : *அன்னை காணும் கடவுள், ஆண்டவன் காணாத அன்னை, இவ்வளவுதான் எனக்குத் தெரியும்.*

**கே: கருடா...... கருடா........ மனிதனைப் பற்றி என்ன நினைக்கின்றாய்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப : போர் விமானங்களைக் கண்டுபிடித்து விட்டு அதற்குத் தப்புவதற்குப் பதுங்கு குழி வெட்டும் பாவம் என்கிறேன்.!

**கே: நீ உண்மையான கருடன் என்று கூறினாயே! உன் பயணம் எங்கே முடியப்போகிறது?**

ப : கோழிக்குஞ்சுகள் பலவீனமாக இருக்கும் மட்டும் எனக்குப் பயணங்கள் முடிவதில்லைப் பிரபு.

**கே: சிரிப்பிற்கான சஞ்சிகை சிரித்திரனுக்குப் பின் இந்தியாவின் ஆனந்த விகடனைப் போல் தேனகத்தின் சுவைத்திரள் என்றால் ஏதும் தப்பு உண்டா?**

ப : எனக்குத் தற்பெருமை கிடையாது. உங்கள் வாய் பொன் வாயாக இருக்கட்டும்!

**கே: காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை மூடப்பட்டதால் என்ன விளைவுகள் உண்டாகியுள்ளன?**

ப : சூழலுக்கு அமைதி. தொழிலாளருக்கு அவதி. அரசுக்குப் பகுடி.

**கே: அதிக பவுணில் தாலிக்கொடி கட்டும் பெண்களைக் கண்டால் என்ன நினைப்பீர்?**

ப : உஷ்...... மூச்........ கணவன் பண பலம் உள்ளவன் என்பதைக் காட்டும் அடையாளம் அது.

**கே: டோய் நாட்டுக் கருடா நீ 3 மாதம் கம்பி எண்ணினாயாமே! எப்படிச் சுகம்?**

ப : மூன்று மாத வாடகைக்காசு எனக்கு லாபமாகக் கிடைத்தது. உமக்கேன் எரிச்சல்?

**கே: உதவி செய்த பின் உபத்திரம் கொடுப்பவர்களைக் கண்டால் என்ன எண்ணுவாய்?**

ப : பாம்பின் வாயில் இருந்து தமயந்தியைக் காப்பாற்றியவன் வேடன். அவன் செய்த உதவிக்காக க் கற்பைக் கேட்டான். உபத்திரவம் செய்பவர்கள் பணத்தைத்தானே கேட்கிறார்கள். அது அவர்களின் பெருந் தன்மை அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: தோல்வியை வெற்றியின் படிக்கல்லாகக் கொள்ளலாமா?**

ப : *சாதகமில்லாத காலத்தில் வெற்றிப் படியும் தோல்வியாகும். அதை நீங்கள் உணரவில்லைப் போலும்.!*

**கே: கொக்கு ஏன் ஒற்றைக் காலைத் தூக்குகின்றது?**

ப : *மீனைக்கண்ட பின்பு காலைத் தூக்க அது விரும்பவில்லை.*

**கே: ஒரு பெண் எதனை எதிர்பார்க்கக் கூடாது?**

ப : *பெரிய மீன் பிடித்து வந்த கணவனிடம் மேசை உப்பு வேண்டி வந்தீரா எனக் கேட்கக் கூடாது.*

**கே: எடுத்ததற்கெள்ளாம் எரிந்து விழுபவர் பற்றி உங்கள் கருத்து என்ன?**

ப : *தீ அவர்*

**கே: வவுனியா ரயிலில் மயக்க உணவுகள் கொடுத்து மக்களின் பொருட்கள் கொள்ளையிடப்படுகின்றன. இதை நிற்பாட்ட என்ன வழி?**

ப : *நாகாக்க என்ற வள்ளுவனின் தத்துவம் போல யாரிடம் எப்போது, எங்கே வாங்கிச் சாப்பிடுவது என்பதையும் சேர்த்து அறிந்து நடப்பின் பறிகொடுத்தல் நடக்காது.*

**கே: நாய்கள் ஏன் அதிக காலம் வாழ்வதில்லை?**

ப : *வாலாட்டி வாழும் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக!*

**கே: இலஞ்சம் வாங்கியவன் அயோக்கியன் என்கிறேன். நீர் என்ன நினைக்கிறீர்?**

ப : *கொடுத்தவன் யோக்கியனா?*

**கே: சிந்தித்தால் சிரிப்பு வரும் மனம் நொந்தால் அழுகை வரும். இந்த அடிகள் என்னைக் கவர்ந்தது உம்மைக் கவரவில்லையா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப : கவர்ந்தது.......... ஆனால் சிந்தித்தால் எனக்கு அழுகை வரும். மனம் நொந்தால் சிரிப்பு வரும். நான் Negative கலைஞன்

**கே: ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?**

ப : ஐம்பதில் தான் இப்போது முழுவதும் வளைந்து விடுகிறதே.

**கே: ஒருவனின் நாட்குறிப்பைப் பார்த்து அவனின் குண இயல்பை அறியலாமா?**

ப : அறிய முடியும்! தனக்கு வருமதியான கணக்கைக் குறித்து விட்டுக் கொடுக்க வேண்டிய கணக்கைக் குறியாதவன் அசல் போக்கிரி என்பதை அறிந்து கொள்வீர்!

**கே: ஒரு குடும்பத்தில் அதிகம் பொறுப்புணர்ச்சி கொண்டவர் யார்? உவமையுடைய உரைநடையில் உண்மையை உரை! இன்றேல் உனது தலை சிதறும்!!**

ப : பிள்ளையோ மணிக்கம்பி! தந்தையோ நிமிடக்கம்பி, தாய் தான் செக்கனுக்குச் செக்கன் துடிக்கும். இதயக்கம்பி உணர்வாய் தம்பி ..... ......

**கே: தமிழ் நாட்டு முதலமைச்சருக்கும் மற்றைய நாடுகளின் முதலமைச்சருக்கும் என்ன வித்தியாசம்?**

ப : தமிழ் நாட்டு முதலமைச்சர் ஸ்ரூடியோவில் இருந்து வருவார். மற்ற நாட்டு முதலமைச்சர்கள் பல்கலைக் கழகத்தில் இருந்து வருவார்கள்.

**கே: யார் பாக்கியசாலி? யார் அபாக்கியசாலி**

ப : கஷ்டப்பட்டுப்பலன் அடைந்தவன் பாக்கியசாலி, பலன் அடைந்து விட்டுக் கஷ்டப்படுபவன் அபாக்கியசாலி.

**கே: வெளிநாடு போனவனின் மனோநிலை எப்படிப்பட்டது?**

ப : நான் தப்பி விட்டேன்! எனது பெண்டாட்டிக்கு மாத்திரம் விசா கிடைத்தால் போதும் என்பது போன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: உண்மையைக் கலப்படம் செய்யலாமா?**
ப :பொய் கலவாத உண்மை சாப்பாடு போடும் என்றால் உண்மையே பேசவும்.

**கே: மூன்றாவது உலக யுத்தம் மூண்டால்?**
ப : வென்றவனும் பாபர் மசூதி ; தோற்றவனும் பாபர் மசூதி.

**கே: சீதை ஏன் தீயில் புகுந்தாள்?**
ப : இராமர் தீ புக ஆயத்தம் இல்லை என்பதால் !

**கே: உலகத் தலைமை எவ்வாறு நகர்ந்து கொண்டிருக்கிறது?**
ப :தலைமைக்கு உகந்தவர்களின் தலையைக் கொய்து கொண்டிருக்கின்றது.

# பாகம்- 04
# நிறைவுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பகுதி 05

**கே: ஒருவனின் உயிரைப்பறிக்கும் பயங்கரக் கருவி எது?**
*ப : கட் - அவுட்.*

**கே: இலங்கையின் அரசியல் நிலை என்ன?**
*ப : பூரண கலகம், பாதி ஆயுள் .*

**கே: எவன் அதிர்ச்சி அளிக்க வைப்பவன்?**
*ப : வெளிநாட்டுத் தபால் என்பலப்பில் உள்நாட்டுக் கடிதம் எழுதுபவன் .*

**கே: எம் நாட்டின் இன்றைய நிலையை நகைச்சுவையுடன் சொல்?**
*ப : வெங்காயம் இறக்குமதிச் சரக்கு.*
*எம் நாட்டுப் பெண்கள் ஏற்றுமதிச் சரக்கு.*
*இதுவே எம் நாட்டின் நிலையில் ஒன்று.*

**கே: மனிதனின் மிகப் பெரிய பலவீனம் எது?**
*ப : சித்திரம் கீறுவதற்கே தன்னை நிர்வாணப்படுத்துவது.*

**கே: தமிழ் நாட்டில் அதிக எழுத்தாளர்களும் சஞ்சிகைகளும் வெளிவரக் காரணம் என்ன?**
*ப : அங்கு முற்போக்கு எழுத்தாளர்கள் என்று எவரும் "லேபல்" போட்டுக் கொள்வதில்லை, பதிப்பகங்களும் இலட்சியப்பதிப்பகம்எனத்தம்மைப்பறைசாற்றுவதில்லையே!*

**கே: படித்தவன், படியாதவன் இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?**
*ப : மூன்றாவது எழுத்தில் வித்தியாசம் இருக்கின்றது ஹ..........ஹ............ இதுவுமா உமக்கு விளங்கவில்லை!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: பாரதியார், காந்தியடிகள், திருவள்ளுவர் போன்றவர்கள் இந்தக்காலத்தில் இருந்தால் உலகம் எப்படி இருக்கும் உன் கவிதை வேண்டாம். மரியாதையாகப்பதில் சொல்?**

ப : அப்படி இருந்தால் சூரியன் ஒன்றும் மேற்கில் தோன்றாது. பாரதியாரைக் கவியரங்கிற்குத் தலைமை தாங்கப் பலரும் அழைப்பர். காந்தியடிகளுக்கு ஆயுதத்தால் மாலையிடுவர்! திருவள்ளுவர் வாயேதிறக்காமல் இருக்க ஆஸ்தான கவிஞர் பட்டம் அளிப்பர்.

**கே: இன்று உலகில் நடக்கும் போர்களை வரிசைப் படுத்திச் சொல்ல முடியுமா?**

ப : 1. மதப்போர்

2. மண் போர்

3. மனப்போர்

4. *MONEY* போர்

**கே: கருடா நவீன உலகில் உமக்குப்படித்தது என்ன? பிடியாதது என்ன?**

ப : தனது வருங்கால மருமகனுக்கு மாமனார் கொடுக்கும் சீதனம் ஏதோ ஒரு வகையில் எனக்குப்பிடிக்கும். கட்டிய மனையாளைச் சில நாட்களில் வீட்டில் விடுத்துச் சிதனக் காசில் வெளிநாட்டுக்கு ஓட மாப்பிள்ளை "டிக்கட்" எடுக்கிறாரே......... ......... அது எனக்கு பிடியாது.

**கே: ஹிட்லர் யூதர்களுக்குச் செய்தது கொடுமைதானே.......?**

ப : அவரால் தானே யூதர்கட்குத் தனிநாடு கிடைக்க வேண்டி வந்தது.

**கே: உங்களால் மறக்க முடியாத ஒரு சிறு ரயில் சம்பவம் சொல்ல முடியுமா**

ப : ஓம்.......... வெள்ளவத்தைக்கு ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். கண் இல்லாத இரு நண்பர்கள் பிச்சை எடுத்தனர். அவர்களிற்கு அதிகம் பிச்சை சேர்ந்தது. அதைப் பார்த்த கண் உள்ள பிச்சைக்காரன் இனி இந்த ரயிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் வரக்கூடாது என எச்சரித்தான். அவனின் முக பாவத்தை என்னால் மறக்க முடியாது உள்ளது.

**கே: மே தினத்தின் அர்த்தத்தைச் சிரிப்போடு சிந்தனையாக உம்மால் சொல்ல முடியுமா?**

ப : தொழிலாளர் தினம் மே தினம். ஒரு வருடத்தில் ஒரு நாள் மாத்திரம் நினைவுகூரக்கூடியவன் தொழிலாளி என்பதை மே தினம் சுட்டிக் காட்டுகின்றது.

**கே: அன்பின் கருடா.... எனக்கோர் சந்தேகம். தாய்மையின் அன்பிற்கு ஈடில்லை என்கின்றோம். ஆனால் பெற்றபின் வீதியோரத்தில் குழந்தையை விட்டு விட்டு ஓடும் தாயின் நிலையைப் பற்றி என்ன கூறுவது?**

ப : பிள்ளாய்.......... சந்தையில் வாங்குவதல்ல, அப்பாப் பண்டம். அதனை உணர்ந்திருந்தால் அவளிற்கு வந்திராதே அபாண்டம்.

**கே: இலங்கை ஆண்களிடம் விவேகம், வீரம் ஆண்மை என்பன நிறைய உண்டு. இதனை நீங்கள் ஏற்கிறீர்களா?**

ப : எமது பெண்களை அயல் நாடுகளுக்குப் பணிப்பெண்ணாக அனுப்பும் நாமா விவேகிகள்? அவர்களைப் பெற்று வாழ்வளிக்க முடியாத பேடிகளா ஆண்மை மிக்கவர்கள், கூறடி மாலா.

**கே: நீர் சிரிப்புப் பத்திரிகை நடாத்துவதின் அர்த்தம் என்ன?**

ப : பொறாமை சிரிப்பதில்லை. வஞ்சனை சிரிப்பதில்லை. சூதிற்கும், வாதிற்கும், போருக்கும் சிரிப்பில்லை. இனவாதம் சிரிப்பதில்லை. அணுகுண்டு சிரிப்பதில்லை. வீட்டிலே நாட்டிலே சிரிப்பு மலர்ந்தால் உலகம் சோலை வனம் ஆகும் என்ற கோமாளித்தனமே இச்சஞ்சிகையை வெளியிட மூலகாரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: ஆபிரகாம் லிங்கன் பிறக்காது இருந்தால்?**

ப : அடிமை வியாபாரம் தொடர்ந்திருக்கலாம். ஆனால் ஒன்றுபட்ட அமெரிக்காவுக்கு உலகம் அடிமையாக வேண்டிய தேவை இருந்திருக்காது.

**கே: காட்டில் வளரும் மயிலுக்கும் வீட்டில்வளரும் மயிலுக்கும் என்ன வித்தியாசம்?**

ப : காட்டில் வளரும் மயிலின் தோகையில் சுதந்திரச் சிலிர்ப்பு உண்டு; வீட்டில் வளரும் மயிலின் தோயையில் அடிமைப் பயிர்ப்பு உண்டு.

**கே: இறைவன் எமக்குச் சொல்லும் செய்தி என்ன?**

ப : உலகம் எல்லாம் காற்று இருக்கு ; உன் மூக்கு இழுத்த அளவு உன் வாழ்க்கைக்குக் காணும் என்கிறார்!

**கே: கஷ்டம் வந்தால் தற்கொலை செய்யலாமா?**

ப : சூறாவளி அடித்தால் சுவாசிக்கும் காற்றை நிறுத்தி விடுவீரோ?

**கே: இறைவன் யமனை இனம் காட்டாமல் விளையாடுவதேன்?**

ப : கீரியையும் படைத்து பாம்பையும் படைத்து "பகை" என்ற யமனைப் புகுத்தியவன் யாரப்பா ரூபா.

**கே: வாழ்க்கையின் நியதி என்ன?**

ப : உள்வாங்கிய காற்றையும் வெளியேற்றி விட்டே சாகவேண்டும்.

**கே: அடக்கு முறை ஆட்சியாளர்கள் எதனை நினைத்துக் கவலைப்படுவார்கள். எதனை நினைத்துக் கவலைப் படமாட்டார்கள்?**

ப : டைனோசர் அழிந்ததைப்பற்றிக் கவலைப்படுவார்கள். குடிமக்கள் அழிவதைப் பற்றிக் கவலை அடையமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: வெளிநாடுகளுக்கு அகதிகளாகப் போன தமிழன் மீண்டும் திரும்பிவிரும் சாத்தியம் உண்டா?**

ப : *நீலம் வெள்ளையாகுமெனில் சாத்தியமோ சாத்தியம்.*

**கே: இலங்கையின் எதிர்காலம் எப்படி இருக்கும்.**

ப : *புதைகுழிகள் சமாதானம் பேசும் காலம் வரை உங்கள் கேள்விக்கான பதிலை ஒத்திப்போடுகிறேன்.*

**கே: இப்போதெல்லாம் சிறு சஞ்சிகைகள் புதிது புதிதாகத் தோன்றுகின்றனவே இது எதனைக் காட்டுகின்றது.**

ப : *அவர்களின் கருத்துக்களைப் பெரும் பத்திரிகை பிரசுரிப்பது இல்லை என்பதைக் காட்டுகின்றது.*

**கே: ஒரு விமர்சகர் எழுத்தாளனை மேலும் நல்ல படைப்புக்களை உருவாக்க வழி காட்ட வேண்டும். ஆனால் பலர் எழுத்தாளர்களை மட்டம் தட்டி தாங்கள் பெயர் எடுக்க முற்படுகிறார்களே? உங்கள் கருத்து என்ன?**

ப : *அவர்களின் சட்டம் எல்லாம் தங்களின் வட்டத்தின் விட்டம் இவ்வளவே என்பதையும், தம் திட்டத்தைக் கட்டம் கட்டமாக வெளியிடும் போது நீங்கள் கொட்டம் அடிக்கக்கூடாது என்பதுவுமே! ரேக் இட் ஈ.சி.*

**கே: மட்டக்களப்பு வழமைக்குத் திரும்பிவிட்டது என்று நான் சொல்கிறேன்! இல்லை என்கிறான் நண்பன் ; உங்கள் பதில் என்ன?**

ப : *ஐயா உங்கள் நண்பன் இரவு 10 மணிக்கு இரண்டாம் காட்சி பார்ப்பவர் அவர் சொல்வது என்ன பிழை?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: பத்துத்தலை இராவணன் ஏன் இலங்கையில் பிறந்தான்?**

ப : இலங்கையில் வாழ்க்கை நடத்துவது என்றால் பத்துத் தலைகள் தேவையெனக் காட்டுவதற்கு!



# பாகம்- 05
# நிறைவுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டுக் குருடன் பதில்கள் — பகுதி 06

**கே: மட்டக்களப்பில் இப்போது வெயில் கொளுத்துகிறது! தீ பற்றுமா?**

*ப : நீர், கண்ணகியானால், நகரபிதா பாண்டிய மன்னன் ஆகின் "தீ" பற்றலாம்.*

**கே: ஒன்றை அடைய முடியாதவன் என்ன செய்வான்?**

*ப : சூரியனை அடைய முடியாதவன் கிரகணத்தை அறிந்து சொல்வதுபோல அடைய முடியாத பொருளின் குறைகளை எதிரிக்கு அறிவிப்பான்.*

**கே: மனிதனுக்கு நெற்றிக்கண் இருந்தால்?**

*ப : பனையின் நுங்குக்கு மூன்று கண். உள்ளதால் கடவுள் அந்தஸ்து அழிக்கப்படுமா?*

**கே: தமிழ்மக்கள் ஆயிரக்கணக்கில் இறந்தும், இலட்சக்கணக்கில் இடம்பெயர்ந்தும் மெத்தப்படித்த த.வி.கூ.எம்.பிக்கள் அடையாளமாகவாவது இராஜினமாசெய்யவில்லையே அர்த்தம் என்ன?**

*ப : அது காகம் போட்ட எச்சம்! விமர்சனத்துக்கு அப்பால்பட்டது.*

**கே: மொழிக்காகத் தீக்குளிக்கும் போர்வாள்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*ப : உணர்ச்சியால் உந்தப்பட்ட அந்த உத்தமர்களுக்குச் கண்ணீர் சிந்துகிறேன். இல்லாமைப் பிரச்சனைகளால் தீக்குளிக்கும் பெண்களுக்காகக் கண்ணீர் எவரும் சிந்துவதில்லையே!*

**கே: பிறக்கும்போதும் அழுகின்றான் மனிதன் இறக்கும் போதும் அழுகின்றான் அழுகின்றான் மனிதன் புதிய விளக்கம் தேவை?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப : பிறக்கும் போது அழுவது குழந்தை. குழந்தையுடன் சேர்ந்து அழுவது தாய் ; அதிஷ்டசாலி தந்தை.

**கே: சிலபாட்டாக்கள் இளம் பெண்களைத் திருமணம் செய்ய ஓடுகிறார்கள்! இதைத் தடுக்க என்ன வழி?**

ப :ரூபா 99.90 மிக்க "*BATA*" வால் பாட்டாவுக்கு மரியாதை வழங்கப் பெண்கள் தயார் இல்லையா?

**கே: எனக்கு மலச்சிக்கல் உள்ளது. இதனைப் போக்க என்ன வழி?**

ப :குழந்தாய் நடு இரவில் விழித்து அரைச் செம்பு தண்ணீர் குடிக்கவும்.

**கே: ஆத்திலே மீன் பிடிக்க, காத்திருந்த கொக்கு அதைக் கௌவிக் கொண்டு போவது ஏன் கருடா?**

ப : கொக்குக்கு மீன்பிடிக்கத் தெரியாமல், பிடித்த மீனைக் கௌவவா வரும்? நான் கருடன்......... யோசித்துக் கேள்வியைக் கேளு!

**கே: அன்னம் ஏன் அழிந்தது?**

ப : அழகு அழியும் என்பதை உலகுக்கு எடுத்து உரைக்க!

**கே: கனம் கருடனாரே.... பானை பிடித்தவள் பாக்கியசாலி என ஏன் சொல்கிறார்கள்?**

ப : யானை பிடித்துத் தந்தம் எடுக்கப் பெண்ணுக்கு வலிமை இல்லை என்பதால்!

**கே: சிரித்திரன் போல் சுவைத்திரள் உள்ளதே பதில் என்ன?**

ப : அங்குதான் ஆசிரியர் சிந்தனையைக் கற்றார் ; சிரிப்பினைக் சிரித்திரன் பின் சுவைத்திரள் தொடர்வார் என்பது அதன் பொருள்.

**கே: இன்றைய எமது நாட்டில் இனிமையானது எது? இனிமையற்றது எது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப : இனிமையானது தபால்காரன் "பெல்" அடிப்பது!
இனிமை அற்றது காவலர் "ஷெல்" அடிப்பது!

**கே: யார்பாக்கியசாலி? யார் அபாக்கியசாலி?**

ப : கஷ்டப்பட்டு பலன் அடைந்தவன் பாக்கியசாலி, பலன் அடைந்து விட்டுக் கஷ்டப்படுபவன் அபாக்கியசாலி.

**கே: இன்றைய கல்வி எப்படிப்பட்டது?**

ப : கதிரையில் இருந்து படிக்க உதவும். கதிரை செய்ய உதவாது.

**கே: கவிதை எப்போது வெற்றியடைகின்றது எப்போது தோல்வி அடைகின்றது?**

ப : நீ நீயாக வரவேண்டும் என நினைக்கும் போது வெற்றியும் கண்ணதாசனாக வரவேண்டும் என எழுதும்போது தோல்வியும் அடைகின்றது.

**கே: அழகு எப்படிப்பட்டது?**

ப : கிட்ட வந்து பழகும் போது மெல்லத் தேயும் ; எட்ட நின்று எண்ணும் போது தீ போலக் காயும்!

**கே: அரசியல்வாதி எப்போது உண்மை பேசுவான்?**

ப : பஜிரோ ஜீப் பள்ளத்தில் இறங்கிய போது.

**கே: வாழ்க்கையில் நீர் கண்டது என்ன?**

ப : ஒரு இறாத்தல் பாண் எனச் சொல்லி வர்த்தகர்கள் 10 அவுன்ஸ் பாண் விற்பதைக் கண்டது தான்!

**கே: உலகம் அறிவாளியை எப்படி மதிக்கறிது. பணக்காரனை எப்படி மதிக்கிறது?**

ப : அறிவாளியை மின்மினி போலவும், பணக்காரனைக் கண்மணி போலும் மதிக்கின்றது.

**கே: அறியாமை எப்போது சிரிக்கிறது?**

ப : பணக்காரனிடம் அறிவாளி பணம் யாசிக்கும் போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: ஒரு பெண்ணின் வாழ்வு கண்ணீர்க் காவியம் தானா?**

ப : கணவனின் உழைப்பில் உலை வைத்தால் நன்னீர்க் காவியம் ; கணவனுக்கே உலை, வைத்தால் கண்ணீர்க் காவியம்.

**கே: மூளைச்சோம்பேறித்தனம் எப்போது வரும்?**

ப : இளைஞன் வயோதிபத்தை எண்ணித் துயர்படும் போது வந்து விடும்.

**கே: ஒரு தாய் சிரிப்பது எப்போது? ஊர் சிரிப்பது எப்போது?**

ப : தனது ஆண் மழலைக்குப் பல்லு முளைக்கும் போது தாய் சிரிக்கிறாள் ! அம் மழலை இளைஞனாகி ஊர்க் கொமருகளுக்குப் பல்லைக்காட்டும் போது ஊர் சிரிக்கின்றது.

**கே: பெண்களைக் கண்டால் சிலருக்கு மொழி தடுமாறுவதேன்?**

ப : ஆசை வரப் பாசை குழையும் பிள்ளாய்!

**கே: மொழியைப் படைத்தவன் கடவுள் என்றால் அவன் ஊமையை ஏன் படைத்தான்?**

ப : ஊமையைப் படைத்தவன் கடவுள் என்றால் ஊமை மொழியைப் படைத்தவன் யார் தானோ?

**கே: தமிழனின் கலாசார வலு இன்று எப்படி?**

ப : சவூதிபோய் வந்த தம்பிக்கு மதிப்பு;
தங்கை போனால் மிதிப்பு.

**கே: எனக்குப் பிள்ளை இல்லை........ பிள்ளை இல்லை என ஒருவன் சொல்லுகிறான். நகைச்சுவையாக இதனை எப்படிச் சொல்லலாம்?**

ப : கட்டில் ஆடியது;
தொட்டில் ஆடவில்லை.

**கே: நஞ்சுக்கும் கயவனுக்கும் என்ன வித்தியாசம்?**

ப : நஞ்சு குடித்தால் உடன் மரணம், கயவனின் பார்வை படும்போது படிப்படியான மரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: சிலர் பஸ்சில் சிலருக்கு கால் போடுவது ஏன்?**
ப : *பாலோடு தேன் கலந்து சாப்பிடும் பள்ளியறை நினைவு பஸ் ஓட வந்ததாக!*

**கே: பாலும் தெளிதேனும் கலந்து தருவதாகச் சொன்ன ஔவையார் சங்கத்தமிழ் டாக்டரா?**
ப : *பாலும் நெய்யும் கலப்பின் நஞ்சாகும். பாலும், தேனும் கலந்து எனப் பாடியதால் டாக்டர் தான்...........*

**கே: கருடா........ வாக்காளனுக்கும், எம்.பீக்கும் என்ன வித்தியாசம்?**
ப : *வாக்காளன் விதைத்த தானியம் உண்பவன்*
*எம். பீ. விதையாத மானியம் உண்பவன்.*

**கே: அன்று மனம் போரி, இன்று கிருசாந்தி நாளை?**
ப : *ஓம் ..... சாந்தி! சாந்தி!*

**கே: இலங்கை நாட்டின் இன்றைய நிலை என்ன? கவிதையில் பதில் சொல்**
ப : *மனநோய் வந்தால் அங்கொட*
*புடவை வாங்கப் பூ கொட*
*தெரியாத சடலம் பொல் கொட*
*பிரச்சனை வேண்டாம்; நீ நட*

**கே: அழகைப் படைத்தவன் இறைவன் என்றால் அவன் அழிவையும் ஏன் படைத்தான்? கண்ணதாசனின் இக் கேள்விக்கு உமது பதில் என்ன?**
ப : *அழிவில் அழகு இல்லையென்று யார் சொன்னான்? கண்ணா இருளின் அழிவில்பகல். வானம் அழியாது; வானவில் அழியும். நிலவு ஒழிவதில்லை; நிலவு தேய்வது உண்டு தமிழ்க் கவிஞா.*

# பாகம் - 06
# நிறைவுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுக் கருடன் பதில்கள்

## பகுதி 07

**கே: மதமாற்றம் என்ன செய்யும்? கருடா . . . இதற்கான பதிலைப் புதிய கவிதையில் சொல்வாயாக?**

ப : மண்ணோடு மண்கலந்தால் மண்ணாகும்!
மண்உண்ணும் விருப்பமது கர்ப்பமாகும்!
மருந்தோடு விருந்துண்ணல் குழப்பமாகும்!
கோல் ஊன்றி நடந்துவரின் முதுமையாகும்!
மதத்தோடு மதம் கலப்பின் அன்பு மதமாகும்!
மதம் மாறி மாதம் சேரின் ஆம் .. அதுவே மரணமாகும்.

**கே: சினிமாக் கவிஞர்கள் பற்றி உமது கருத்து என்ன?**

ப : கவிஞர் வாலியின் கருத்துத்தான் எனது கருத்தும் ...
அவர் பின் வருமாறு எழுதியுள்ளார்.
“மெட்டுக்குள் கருத்தரித்து
மெல்லவே இடுப்புநோகத்
துட்டுக்குத் தகுந்தவாறு
முட்டையிடும் பெட்டைக்கோழி”

**கே: விதி பிழைத்தால்?**

ப : நீ சித்திரவதைக்கூடத்தில் அழும்போது உனது மனைவி பிள்ளைபெற ஆஸ்பத்திரியில் அழுவாள், பிறந்தகுழந்தை தொட்டிலில் அழும்.

**கே: ஒருவனுக்கு ஒரே சமயத்தில் வரக்கூடிய இரண்டு சபலங்கள் என்ன?**

ப : புலமையும், வறுமையும் சேரும்போது இரண்டு சபலங்கள் சேர்ந்தது போன்றே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: யார் புத்திசாலி? இரவல் குரலில் பதில் சொல்!**

ப :விபத்து நேரிடும்போதும் விரோதிகள் சூழும்போதும் வறட்சி உண்டாகும் போதும் தீயவர்கள் நட்புநாடும்போதும் எவன் அந்த இடத்தை விட்டேஓடி விடுகின்றானோ அவனோ புத்திசாலி எனச் சமஸ்கிருத நூல் ஒன்று கூறுகின்றது.

**கே: பாலிய நண்பனுடன் எவ்வாறு பழகவேண்டும்.**

ப : அவருடன் பழகும்போது "ல்" என்ற எழுத்தை எப்போதும் சேர்க்காது தூரநின்று பழகவேண்டும்!

**கே: இளங்கோ அடிகள் படைத்த கோவலன் பற்றி உமது கருத்து என்ன?**

ப :தனக்குத் தானே சட்டத்தரணியாகாமல் செத்துப் போனானே கோவலன். இதனைப் படைத்த இளங்கோ அடிகள் குற்றவாளி. இது கருடன் தீர்ப்பு.

**கே: கோள் சொல்பவர்கள் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?**

ப :குறிக்கோள் இல்லாதவர்கள்.

**கே: ஆசிரியன் மாணவர் உறவு எப்படி இருக்கவேண்டும்?**

ப : "Better Half" நிலைக்கும் போகக்கூடாது.

**கே : இலங்கையின் எதிர்காலம் எப்படி இருக்கும்?**

ப : எதிர்காலத்தின் எதிர்காலம்.

**கே: மட்டக்களப்பு இலக்கியவாதிகள் நிலை எப்படி உள்ளது?**

ப : இளமையில் இறந்துவிடுகிறார்கள். பெரிய துரதிஷ்டம் இலக்கிய வானிற்கு.

**கே: மான்கள் காட்டில் ஓடும்போது உங்களுக்கு என்ன உணர்ச்சி ஏற்படுகிறது?**

ப : மான்களுக்கு மான்நில சுயாட்சி உண்டு என்ற உணர்வு.

**கே: பல கல்யாணம் செய்பவர்கள் பற்றி உமது கருத்து என்ன?**

ப :அவர் சதை மாற்றுச் சக்கரவர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: அன்புள்ளவனா, பண்புள்ளவனா உயர்ந்தவன்?**

ப : பண்பால் உயர்ந்தவன் பெட்டிக்குள் அன்பும் இருக்கின்றது. அதனால் பண்பால் உயர்ந்தவனே உயர்ந்தவன் ஆவான்!

**கே: அற்பனுக்குப் பவுசு வந்தால்?**

ப : இரத்தினக்கல்லை வாங்கிப் பஞ்சில் வைப்பான். வயது வந்த தாய், தந்தையரை "ஓரம்போ" என்பான்.

**கே: நான் பணக்காரனாக இருக்க விரும்புகின்றேன். ஒருயோசனை சொல்லும்.**

ப : சினிமாப்பாட்டுப் புத்தகம் விசிலடித்து விற்கவும். விரைவில் பணக்காரன் ஆகலாம்.

**கே: ஒரு மனிதன் வெளியுலகில் மதிக்கப்பட வேண்டுமானால் வீட்டில் மனைவி எப்படி இருக்கவேண்டும்?**

ப : மனைவியின் தலை வீட்டில் குனிந்திருக்குமானால், அந்த மனிதனின் தலை வெளியுலகில் மதிக்கப்படவேண்டிவரும். வீட்டில் மதுரை ராச்சியம் இருந்தால் வெளியுலகில் எந்த ராச்சியமும் அவரால் எட்டப்படமுடியாது.

**கே: உழைக்கப்பயந்த கோழை எப்படி இருப்பான்?**

ப : அவன் சாவின் செலவுக்குப் பயந்து சுடலையில் தற்கொலை செய்து கொள்வான்.

**கே: ஐயா . . . நீங்கள் மதம் மாறுவீரா?**

ப : எனக்கு இன்னும் மதம் வரவில்லை. வந்த பின்பு அறிவிப்பேன்.

**கே: கருடா ஒருவன் 200 வருடம் வாழ்ந்தால் வாழ்க்கை ருசிக்குமா?**

ப : அவருக்கு அதிகாரம் செலுத்துவதற்குப் பலர் வந்துவிடுவர். அடக்கி ஆளப்பட விரும்பாதவர்கள் அறுபது எழுபது வயதுடன் கண்ணை மூடுவது புத்திசாலித்தனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: உலகம் பிறந்தது எனக்காக, ஓடும் நதிகளும் எனக்காக மலர்கள் மலர்வது எனக்காக, அன்னை மடியை விரித்தாள் எனக்காக எனக் கண்ணதாசன் பாடியுள்ளார். இதனைப் பாடினால் உமக்கு என்ன எண்ணம் உண்டாகும்?**

*ப : ஜேம்ஸ் மொான்ட்கோமரி என்ற அறிஞர் பின்வருமாறு கூறுகின்றார். "கடவுள் படைத்த பாவமும் மரணமும் நிறைந்த இந்த உலகமே அழகாக இருந்தால் சுவர்க்கம் இன்னும் எவ்வளவு அழகாக இருக்கும்" வித்தியாசமாகச் சிந்திக்கும் பிறநாட்டு அறிஞர்களையும் கவனத்துக்கு எடுக்கவும்.*

**கே: கவிஞர் வைரமுத்து கண்ணதாசனின் இடத்தை எட்டிவிட்டதாகச் சொல்கிறேன் ஏற்றுக்கொள்வீரா?**

*ப : ஏற்றம், இறக்கம், நெளிவு, சுளிவு, அதிர்வு, சுற்றல், வளைத்தல், இளமை, வளைவு யாவும் கலந்தவையே கவிதைகள். வசனகவிதைகளை இசையலங்காரத்தால் தங்க ரதத்தில் ஏற்றமுடியுமென்றால் ஏற்றிவைக்கவும். எமக்கு ஆட்சேபனை இல்லை.*

**கே: அரசியலில் தூர திருஷ்டியான எழுத்தாளர்களின் நூல்களை நீங்கள் வாசித்ததுண்டா? உதாரணம் இருப்பின் குறிப்பிடவும்.**

*ப : 20 ஆண்டுகட்கு முன்பு அறிஞர்களின் கருத்துக்களைத் திரட்டி ஒரு நூல் வெளிவந்தது. அந்த நூலின் பெயர் 20 ஆண்டுகளின் பின்பு உலகம் எவ்வாறு அமையும்? என்பது அந்த நூலில் சைறஸ் ஈற்றன் என்பவர் இன்னும் இருபது ஆண்டுகளில் அமெரிக்காவும் ரஷ்யாவும் கைகுலுக்கும் என எழுதினார். தீர்க்கதரிசனம் பொய்க்கவில்லை.*

**கே: அறிஞர் பெர்னாட்ஷாவின் வாழ்க்கையில் உங்களுக்குப் பிடித்த சம்பவம் யாது?**

*ப : தான் இறந்தபின்பு அந்தச் சாம்பலைப் பாதுகாத்து அதனைப் பூ மரங்களுக்கு உரமாக்க வேண்டும் எனக் கூறி வைத்தவர் அவர். தனக்குச் சிலை வடிக்க வேண்டும் என அவர் கூறவில்லை. இது ஒரு மறக்க முடியாத சம்பவம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: ஆண்கள் மொட்டைத் தலையர் ஆகின்றார்கள். பெண்களுக்கு அந்த நிலை ஏற்படுவதில்லையே ஏன்?**

ப : *உழைக்கும் தலை உபத்திரவம் கூடினால் மயிரைக் கொட்டும்! உழைத்ததைப்பானையில் கொட்டும் பெண்ணிற்கு ஏண்டாப்பா மயிர் கொட்டப்போகிறது?*

**கே : இன்றைய திருமணச் சந்தை பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளீர்கள்?**

ப : *ஒழுக்கம் அற்ற ஆண்கள் ஒழுங்கான பெண் தேடி அலைகிறார்கள்.*

**கே: மிகச் சிறந்த பேச்சாளர்கள் யார்?**

ப : *சொல்வதற்கு அதிகம் சரக்கு இல்லாத பேர்வழிகள்.*

# பாகம் - 07
# நிறைவுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக் கருடன் பதில்கள் — பகுதி 08

**கே : உங்கள் அனுபவத்தில் உங்களை வேதனையடையவும், சிந்திக்கவைக்கவும் செய்த நிகழ்ச்சி எது?**

ப : *கொழும்பில் ஒரு பெரிய அச்சுக்கூடம் ஒன்றுக்குச் சென்றிருந்தேன். அங்கு 60 வயது முதலாளியுடன் 8 வயது நிரம்பிய அனாதைச் சிறுவன் பழைய பேப்பர்களுக்குப் பேரம் பேசிக்கொண்டு இருந்தான். இதனை நினைத்துப் பார்க்கும்போது (முதலாளித்துவத்தை) நினைத்து நெஞ்சம் துன்புற்றது.*

**கே : ஒழுக்கமற்ற ஆண்கள் ஒழுங்கான பெண் தேடி அலைகின்றார்களே ஏன்?**

ப : *தங்கள் ஒழுக்க இரகசியங்களை மதிலுக்கு மேலால் எறியமாட்டாள் என்பதால்.*

**கே : உலகில் இரண்டு துயரங்கள் சொல்க?**

ப : *நினைத்ததை அடைந்து துயர் அடைவது ஒன்று, இரண்டாவது நினைத்தது கிடையாது அயர்வு அடைவது.*

**கே : டே கருடா காந்தி, லூதர்கிங், கென்னடி, இந்திரா ஆகியோர் எல்லாம் கொல்லப்பட்டார்கள்! அராஜகம் வெல்கிறது! நீதி தோற்கிறது! உமது பதில் என்ன?**

ப : *ஒளி இழக்கப்படும்போது இருள் உண்டாகின்றது. இருள் வென்றது என அர்த்தம் கொள்ளலாமா?*

**கே: அன்பின் கருடா . . . உண்மையிலேயே நீ படித்த சினிமாப்பாடல் ஒன்றில் ரசித்த சினிமா அடியொன்று கூறுவாயாக!**

ப : *இது மருதகாசி பாடியது.*

*"அன்னம் கூட அவளிடத்தில் அழகுநடை பயிலும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடல்கலை இலக்கணத்தை அறியவரும் மயிலும்!
இன்னிசையைப் பாடம் கேட்க எண்ணிவரும் குயிலும்!
இயற்கையெல்லாம் அவள்குரலின் இனிமையிலே துயிலும்''

**கே : கருடா நீ சிரித்தது உண்டா? எப்போது?**
ப : விழுந்த பல்லைக் கட்டக் காசின்றித் தவித்தபோது ஒட்டைப்பல்லால் சிரித்திருக்கிறேன்.

**கே : உங்கள் பார்வையில் குரு எப்படிப்பட்டவராக இருக்கவேண்டும்?**
ப : ஓ.. அதுவா மாணவியைக் கலியாணம் செய்யாத புனிதனாக இருக்கவேண்டும். அது சரி மவள் உமக்குக்குரு பார்வை கிடைத்ததா?

**கே : மனிதனுக்கும் குரங்குக்கும் ஒற்றுமை, வேற்றுமை என்ன?**
ப : இரண்டும் மரம் ஏறும், கள்ளும் குடிக்கும்; பின்னதுக்குச் சீவத்தெரியாது.

**கே : கொத்துரொட்டி அடிக்கும் சத்தம் பிடிக்குமா?**
ப : இப்போது நடாத்தப்படும் திரைப்பின்னணி இசையைவிட இனிமையாக உள்ளது.

**கே : உலகில் சமாதானம் எப்போது தோன்றும்?**
ப : மனிதன் வாழ்வதற்குக் காற்று மாத்திரம் போதுமானதாக இருக்கும் காலம் வரின் சாத்தியமாகும்.

**கே : இன்றைய சினிமா பற்றி உமது கருத்து யாது?**
ப : வாரியாருக்குக் கோயில் கட்டாத மக்கள் குஷ்புவுக்குக் கோயில் கட்டிய வித்தையைச் செய்து காட்டிய மாயை!

**கே: நினைத்தால் இனிக்கும் குழந்தைப்பருவம் எது? பார்த்தால் நடுங்கும் வாலிபப் பருவம் எது?**
ப : இரண்டில் ஒன்று போனால் ஒன்று என அம்மாவின் கணக்குக்குப் பதில் சொல்லிய காலம் பசுமையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டிலை இரண்டு போனால் = 0 என மனைவிக்குக் கணக்குக் காட்டும் வாலிபம் நடுக்கமானது.

**கே: அம்புக்கும், அன்புக்கும் உள்ள வித்தியாசம் என்ன?**
ப : அம்பில் இருந்து புறப்படுவது குறிக்கப்பட்ட உடலின் பகுதியைத் தீண்டி அழிக்கும். அன்பில் இருந்து புறப்படுவது உடலின் மறைக்கப்பட்ட பகுதி எங்கும் சீண்டக்கூடியது.

**கே : ஏன் தம்பி பெண்கள் கராட்டி பழக விரும்புகிறார்கள்?**
ப : சீதைப்பிராட்டிக்குக் கராட்டி தெரிந்திருந்தால் சிறையில் இருக்கவேண்டி வந்திராது. இலக்கியம் படியாதவர்களாக நம்நாட்டுப் பெண்கள்!

**கே : ஏழைக்கும் பணக்காரனுக்கும் இடையில் அமைதியாக இருக்கும் இடைவெளி என்ன?**
ப : பெண் கொள்ளல்.

**கே : பண்பில்லாதவள் வாழ்க்கையில் உயர்ந்தால் . . . ?**
ப : தோழியரைத்தூதுவிட்டு "உங்களை வரட்டாம்" எனக்கணவனை அழைப்பாள்!

**கே : சில ஊர்களில் கணவனிடம் பணம் பறிப்பதாக மனைவி சாராயம் ஊற்றிக் கொடுக்கிறார்களாம். இது பற்றி உமது அபிப்பிராயம்?**
ப : விலங்கு வேளாண்மை.

**கே : படித்த மனிதர்களில் எவரை நம்பி நடக்கக்கூடாது.**
ப : ஒரு குறிக்கோளை அடைவதற்கு "Good Morning" சொல்பவனை நம்பக்கூடாது.

**கே : நாணம் பெண்ணுக்கு மட்டுமா ஆணுக்கு இல்லையா?**
ப : ஒரு டசின் இளம் பெண்கள் வந்தால் நாணம் அடைகிறார்கள். (அல்லவா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : யாழ்ப்பாண எதிர்காலம் பற்றிச் சிந்தித்துப் பதில் சொல்லு?**
ப : வீடு கட்டுவது எதிர்காலம்.

**கே : இளிச்சவாயன் அதிகாரத்தைக் கைப்பற்றினால் . . .?**
ப : புளிச்ச விசயங்களை முழிப்பாகக் கவனித்து மூக்கணாங் கயிறு கட்டுவான்!

**கே : எவன் மனச்சாட்சி இல்லாதவன்?**
ப : ஒருவன் இரத்தம் சிந்தும்போது அதற்காகக் கண்ணீராவது சிந்தாதவன்.

**கே : சமீபத்தில் உமக்குச் சிரிப்பு வந்த விடயம் எது?**
ப : பிட்டிசன் இலக்கியங்களை ஆவணப்படுத்திக் கோவணம் கட்டிய சிலர்,மட்டக்களப்பு இலக்கியம் ஆவணப்படுத்தப் படவில்லை எனப் பேசியபோது.

**கே: ஆசான் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும்?**
ப : பேராசிரியர் என நினைத்துக் கொண்டு உலகவரலாறு தெரியாது உழட்டக்கூடாது.

**கே: கொஞ்சமாவது ஒரு பெண் வாழ்க்கையில் சிரிக்கவில்லை என்றால் என்ன நடக்கும்?**
ப :தீப் பெட்டியில் உள்ள தீக்குச்சிபோல் படுத்திருக்க வேண்டியதுதான்.

**கே : வல்லரசுகளால் செய்யமுடியாத ஒன்று என்ன?**
ப : சூரியனுக்கு "றொக்கற்" அனுப்பமுடியாது.

**கே : காவலர் எது செய்தால் உமக்குப் பிடிக்கும்? எது செய்தால் பிடிக்காது.**
ப : "பாண்ட்" அடித்தால் பிடிக்கும். "பண்ட்" அடித்தால் பிடிக்காது.

**கே: புனர்நிர்மாணத் திணைக்களத்தால் பொதுமக்கள் கண்ட பலன் என்ன?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப: ஒரு உடைந்த வீட்டு உரிமையாளர்கள் ஒரு லட்சம் நட்டஈடு பெற்றார்கள். வீடு இல்லாது வீதியில் நின்றோர் இப்போதும் வாடகை வீட்டில் இருக்கிறார்கள். கண்ட பலன் இதுதான். அந்தோ ..

**கே : ராஜாஜி எழுதிய ஆங்கில எழுத்துக்களில் உமக்குப் பிடித்த சில வசனங்களை ரத்தினச் சுருக்கமாகத் தரமுடியுமா?**

ப : "A strong government and a loyal people no doubt make a good state, but a deaf government and a dumb people do not make democracy"

# பாகம் - 08
# நிறைவுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டுக் கருடன் பதில்கள்

## பகுதி 09

**கே: மாறும் உலகத்தில் மாறாது இருப்பது எது?**

ப : கோழிமுட்டை, கருங்கண்ணா

**கே : வீட்டில் ஒரு நூலகம் இல்லாவிடில் அந்த வீடு எப்படி இருக்கும்?**

ப : பாசி படர்ந்த ஆழக்கிணறு.

**கே: ஔவையார் சங்ககாலம் என்கிறான் என் நண்பன், பிற்பட்ட காலம் என்கிறேன் நான்! எது சரி?**

ப : சங்ககாலம் என்றால் சங்கத்தமிழ் மூன்றும் தா எனப் பாடியிருக்கமாட்டாளே!

**கே : நிலையற்ற மனிதனிடம் உள்ள நிலையற்ற சொத்து எது?**

ப : அரசியல் லாபம்.

**கே : அரசியல் வாதி எதனை நன்கு அறிந்துள்ளான்?**

ப : மாடாய் உழைப்பது கஷ்டம் என்பதையும் நாடா வெட்டுவது மகாசுகம் என்பதையும் நன்கு அறிந்துள்ளான்.

**கே: சுதந்திரம் அடைந்தபின்பு தமிழ்மக்கள் படித்த பாடம் என்ன?**

ப : மகாவலியையும் திசைதிருப்ப முடியாது. பெரும்பான்மை இன அரசியல்வாதிகளின் மனதையும் மாத்த முடியாது என்பதனையும் கண்டு, கேட்டு அறிந்ததுதான்!

**கே : வவுனியாவில் உம்மைச் சிந்திக்க வைத்த தகவல் ஏதும் உண்டா?**

ப : வன்னி மக்கள் அகதியாகும் முன்பு பண்டாரவன்னியன் அகதிபோல் கச்சேரியில் நிற்கும் காட்சி கண்டு கண்கலங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : மீசை சொல்லும் தத்துவம் என்ன?**

ப : *ஆசை வார்த்தையின் அகராதி மீசை.*

**கே : புத்திஜீவிகள் சிலர் (யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர்கள்) பெயர் போடாது சில அரசியல் அறிக்கைகள் வீடுகின்றார்கள் இவர்களைப் பற்றி என்ன நினைக்கறீர்கள்?**

ப : *அதனால் தான் அவர்கள் புத்திஜீவிகள்.*

**கே : மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களை அதிகம் நாடுவதேன்?**

ப : *பழப்பு ஓடாத பணக்காற மாணவி அங்கும் வருவாளாம்!*

**கே : கடவுளுக்கும், மனைவிக்கும் என்ன ஒற்றுமை சொல்லவும்?**

ப : *கடலுக்கு உப்பிட்டவன் இறைவன். கஞ்சிக்கலயத்துக்கு உப்பிட்டவள் மனைவி.*

**கே : எந்த வீட்டில் பெண் எடுக்கக்கூடாது?**

ப : *முந்தியாரும் இந்தக் குடும்பத்திலை இருட்டுக்குச்சேலை தந்தவர்களா எனப்பார்த்துப் பெண் எடுக்கவும்.*

**கே : கருடா சிங்கள மொழியில் இருந்து சில சிந்தனையாளர்கள் சமுதாயம் பற்றிச் சொன்ன அறிவுரைகள் இரண்டு கூறுக?**

ப : *அழகிய வண்ணமுகவட்டி என்ற கவிஞர் பின்வருமாறு எழுதியுள்ளார்.*

*1) நற்பண்புகளைக் கொண்டிராத கெட்ட நடத்தையுள்ள 100 பிள்ளைகளைப் பெறுவதை விட நற்பண்பும், நற்குணமும் கொண்ட ஒரு பிள்ளையைப் பெறுவது மகத்தானது.*

*2) ஒரு நிலவின்மூலம் முழு உலகத்தில் இருட்டையும் அகற்ற முடியும். ஆனால் ஆயிரம் நட்சத்திரங்கள் மூலம் அதனை அகற்றமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : மாதருக்கு நாலுகுணம் எனக் கண்ணதாசன் எழுதியுள்ளார்! கருடா நீ காணும் நாலு குணங்கள் என்ன?**

ப :1) புருஷன் வெளிநாட்டில் உழைத்தால் ஒருகுணம்.

2) உள்நாட்டில் இருந்தால் ஒருகுணம்.

3) வட்டிக்குக் கொடுத்தால் ஒருகுணம்.

4) வெட்டிப் பயலாகப் பிள்ளைகள் திரிந்தால் ஒருகுணம்.

**கே : சூரியன் எமக்குச் சொல்லும் செய்தி என்ன?**

ப :நான் உச்சிக்குமேல் வரும்போது மனிதனின் நிழல் காலடிக்குள் சுருங்கிப்போகும். நீ உறுதியாக இருக்கும் வரை உலகப் பழிகள் உன்மீது விழாது என்பதுவே.

**கே: மனிதனா மரங்களா சக்தி வாய்ந்தவை?**

ப : நிலவில் இருப்பதால் மரங்களுக்குப் பைத்தியம் பிடிப்பதில்லையே.

**கே : எவன் பணிவுள்ளவன்?**

ப : ஒரு கையால் கொடுக்கும் பிச்சையை இரு கையால் ஏற்றுக்கொள்பவன்.

**கே : நாட்டில் நல்லறிஞர்கள் எப்போது சிரிப்பர்?**

ப : எமது யுவதிகள் பணிப்பெண்ணாகப் பல்வேறிடம் சென்று மானம் துறந்து, மதிப்பிழந்து வரும் நிலையில் அரசு பல கலாசார நிலையங்களையும் ,கலாசார உத்தியோகத்தர்களையும் நியமிப்பது கண்டு சிரிப்பர்.

**கே : அருண்டவன் கண்களுக்கு . .**

ப : அயலவன் யாவரும் எதிரி

**கே : இலங்கையின் இனப்பிரச்சினை எப்போது தீரும்?**

ப : இலங்கைத்தீவு எங்கும் பூகம்பம் ஏற்படும்போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : மனைவியின் அழகை எதுவரைக்கும் ரசிக்க முடியும்?**

*ப : கட்டிய மனைவியிடம் பெரும் சொத்து இருக்கும்வரை.*

**கே : பணத்திற்கு வாய் உண்டா?**

*ப : எதிரிகளைப் பணம் கொடுத்து வாய் அடக்கப்பண்ணும் உலகம் இது. வாய் இருப்பது புரியவில்லையா? இன்னும்.*

**கே: வள்ளுவன் பற்றி உமது கருத்து யாது?**

*ப : சிந்தனையில் பின் தள்ளுவன் என்று எவரும் இன்னும் பிறக்கவில்லை.*

**கே : டயானா பற்றி உமது அபிப்பிராயம் என்ன?**

*ப : மாற்றுக் கலாசாரத்தில் உரைத்தால் பங்கம். இல்லாவிடில் இருபத்திரண்டுக்கு நாலு கரற் குறைந்த தங்கம்.*

**கே : எதிரிக்கு எதிரி நண்பனா?**

*ப : அது எதிரிகளைப் பொறுத்தது, கொள்கைக்குறிக்கோள் கொண்ட எதிரிகள் என்றும் எதிரிகளே. பணம்தான் பற்றுக்கோடு என்றால் எதிரிக்கு எதிரி ஒருநாள் நண்பன்தான்.*

**கே : கண்ணகியா, மாதவியா கற்பில் சிறந்தவள்?**

*ப : புள்ளிபடாத வாழ்வுக்குச் சொந்தக்காரி கண்ணகி, காமப்புள்ளி என்றகுடும்பப்புள்ளி புகாதவள் மாதவி, ஒரு புள்ளி மாதவிக்குத்தான் கூட இருக்கின்றது.*

**கே : எவன் மனிதாபிமானி?**

*ப : இரந்து கேட்பவனுக்கு, எதுவும் கொடுக்க முடியாது கையறு நிலையில் இருந்து கலங்குபவன்.*

**கே : ஆயுதம் இல்லாத ஒருவருக்கு பலசாலி தலையில் அடிக்கலாமா?**

*ப : குண்டூசியை அறைவதற்குச் சுட்டியல் தேவையா?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : எந்தத் தொழில் செய்யலாம்? எந்தத் தொழில் செய்யக்கூடாது?**

ப : *கூலித்தொழில் செய்யலாம். ஆனால் கூனித்தொழில் செய்யக்கூடாது.*

**கே : இலங்கையில் இனப்பிரச்சினை தீராமைக்குக் காரணம் என்ன?**

ப : *செய்யுள் இல்லாமல் உரைநடையைப் பலரும் எழுதியமை.*

# பாகம் - 09
# நிறைவுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டுக் குருடன் பதில்கள் பகுதி 10

**கே : இலங்கையில் மலிந்தது எது?**

ப : கொலையை விடத் தற்கொலை மலிந்தது. வியாபாரம் என்ற சொல்லில் "யா" "பா" என்ற எழுத்துக்களை எடுத்து விட்டு "ப" "சா" போட்டு வாசிப்பதும் மலிந்து விட்டதாம்.

**கே : உங்களுக்குப் பணம் இருந்தால்?**

ப : சுவைத்திரள் வெளிவராது.

**கே : பணமா, குணமா மேலானது?**

ப : பணத்திற்குள் இருக்கும் குணம், குணத்திற்குள் இருக்கும் பணம்.

**கே : வறுமைக்கு மறுபெயர் புலமை என்றால் புலமைக்கு வேறுபெயர் என்ன?**

ப : தகமை

**கே : அமெரிக்கா உலக அரங்கில் சர்வாதிகாரியாகுமா, வீழ்ந்து விடுமா?**

ப : உலகம் என்ற பள்ளியில் பாடம் படித்து, உள்நாட்டு ஆயுதக் கலாசாரத்தில் தன்னை இழக்கும் காலம் வந்துவிட்டது.

**கே : ஹிட்லரும், ஆபிரகாம்லிங்கனும் ஒப்பீடுக?**

ப : ஹிட்லரால் யூதர்கட்குத் தனிநாடு கிடைத்தது. லிங்கனால் அமெரிக்க சனநாயகத் தனிநாடு வெள்ளையருக்குக் கிடைத்தது.

**கே : ஒருவனை அழித்துவிடுவது எது? வளர்த்து விடுவது எது?**

ப : அழிக்கக்கூடியவன் ஆயுத எதிரி. வளர்க்கக்கூடியவன் கருத்தால் மோதும் அறிவாளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : ஒரு மனிதன் கலங்கும் கட்டம் வருவது எப்போது?**

ப : *உலை வைக்கும் கரங்கள் உலை வைக்க முற்படும்போது.*

**கே : இலட்சியவாதி எப்படி இருக்கவேண்டும்?**

ப : *செக்கிழுத்துச் கைசிவந்து போகலாம். நக்குண்டு நா இழந்து போகக்கூடாது.*

**கே : உமது எதிரி உம்மீது நட்புப் பாராட்டினால் என்ன அர்த்தம்?**

ப : *முதலைக்குப் பல் "கிளீன்" பண்ணும் மிஸ்டர் கொக்கின் மீது முதலை நட்பா பாராட்டுகின்றது?*

**கே : சீனியில் இலங்கை தன்னிறைவு அடைய என்ன செய்யவேண்டும்.**

ப : *சீனியின் பாவனையைப் பல மடங்காகக் குறைத்தால் தன்னிறைவு அடையலாம்.*

**கே : ஆபத்தை எதிர்நோக்கும் உலகத் தலைவர்கள் யார்?**

ப : *தன்னிறைவு காணாத நாட்டுக்குத் தலைமை தாங்கும் தலைவர்கள்.*

**கே : தீவிரவாதப் பிரச்சினையைச் சரியாக அணுகாமையால் நாட்டுக்கு என்ன கேடு வளர்ந்தது?**

ப : *புரட்சி செய்தவரும் பலியானார். ஜனநாயக ஜனாதிபதியும் பலியானார். ஹேமாவும் விதவையானார். ஸ்ரீமணியும் விதவையானார்.நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான பெண்களையும் வெள்ளைப் புடவை கட்டவைத்தது.*

**கே : இலங்கை அரசியல் கட்சிகளின் சின்னங்களில் வெளிவராத கட்சிச் சின்னங்கள் என்ன?**

ப : *ரயர், தும்புக்கட்டை, ஓணான், பல்லி இன்னும் பல.*

**கே : மனிதனின் முதல் எதிரி யார்?**

ப : *சாட்சாத் மனிதனே!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : பானை பிடித்தவள் பாக்கியசாலியா?**

ப : சோறு வேகும் போது பானையை உடைக்காத "பாட்னர்"வந்தால் பாக்கியசாலி.

**கே : சிறுபான்மை மக்கள் இறுமாப்புக் கொள்ளலாமா?**

ப : கறுத்தப் பொம்பிளை கால் கொலுசு போடக்கூடாதோ?

**கே : புத்தகங்களுக்கு முகவுரை, அணிந்துரை அவசியமா?**

ப : காலம் பதில் சொல்லும். திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்யவேண்டும் எனப் பாரதியார் முகவுரை கொடுத்துள்ளாரே.!

**கே : எமது நாட்டில் திறமையான என்ஜியர்கள் உண்டா?**

ப : அவர்கள் செய்த "டார்ப் பொறி" கூட எம்ம நாட்டுச் சந்தையில் இல்லையே!

**கே : எமது நாட்டின் டாக்டர்கள் தியாக உள்ளம் கொண்டவர்களா?**

ப : அவர்கள் சுய தியாகிகள்.பலவருடங்கள் பல்கலைக் கழகத்தில் படித்து டாக்டராகிச் சில வருடங்களில் வெளிநாடு போய்விடுவார்கள்.

**கே: எமக்குஏற்படும் பாரங்களை இட்டுக் கவலையடையலாமா?**

ப : தன்னிலும் பன்மடங்கு பாராமான பாரத்தை எறும்பு இழுக்கின்றதே.முதுகெலும்பு உள்ள மனிதன் இதை மறக்கலாமா?

**கே : மனிதனுக்குச் சோர்வு அளிப்பது எது? பஞ்சுபோல் இதம் அளிப்பது எது? பாறாங்கல்லாகக் கனப்பது எது?**

ப : பணம் இருக்கும்போது திட்டம் இல்லாமை. திட்டம்இருக்கும் போது பணம் இல்லாமை. மனிதனுக்குச் சோர்வு அளிக்கும். பஞ்சுபோல் இதம் அளிப்பது வாங்கும் சீதனம். பாறாங்கல்லாய்க் கனப்பது கொடுக்கும் சீதனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : கறுப்புக் கலரை மக்கள் எப்போது விரும்புகின்றார்கள்?**
ப : *அச்சில் போட்டுக் கறுத்தக் கண்ணால் வாசிக்கும்போது விரும்புகின்றார்கள்.*

**கே : நீர் கொழும்பு மாநகர சபை அங்கத்தவர் ஆனால் . . ?**
ப : *ஆமர் வீதியின் பெயரை உடனே மாற்றப்பிரேரணை கொண்டு வருவேன்.*

**கே: ஒரு வாகனம் இன்னொரு வாகனத்தை முந்தி ஓடும்போது என்ன நினைப்பீர்?**
ப : *இயமன் மேலே நின்று சாரதிக்கு சபாஸ் போடுகிறானா என நினைப்பேன்.*

**கே : முன்னாள் சோவியத் சனாதிபதி கொர்பச்சேவ் பற்றி உமது கருத்து என்ன?**
ப : *ஜேர்மனியை ஒன்றாக்கத் தெரிந்த ராசதந்திரி, சோவியத்தைப் பல துண்டாக உடைத்த அவதந்திரி.*

**கே : வீட்டுக்கு வீடு வாசல்படி என்றால் என்ன அர்த்தம்?**
ப : *பெண்டாட்டிக்குப் பயந்தவன் எல்லா ஊர்களிலும் இருக்கிறான் என்பது அர்த்தம்.*

**கே : கடல் தொழிலாளர்கள் பெரிதாக உழைத்தும் ஒன்றும் மிஞ்சவில்லையே?**
ப : *நாளையும் பெரிய மீன்வரும் என அவர்கள் நம்புகின்றார்கள்.*

**கே : உம்மைக் கவலையடையச் செய்த ஒரு நிகழ்ச்சி கூறு?**
ப : *ஒரு 'ஷெல்' வீச்சிற்கு எழுத்தாளர் நெல்லை க. பேரன் என்ற எழுத்தாளரும், அவர் குடும்பமும் முழுமையாக அழிந்தது என்னால் சகிக்க முடியாத ஒன்று.*

**கே : கருடா . . நீ இறந்தாலும் வாழ்வாயா?**
ப : *அப்படித்தான் ஆசை. நான் இறந்தாலும் எனது கண்கள் அந்தகனுக்கு ஒளியூட்ட வேண்டும். எனது மண்டையோடு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதசுரபி ஆகவேண்டும். நான் போன பாதைகள் வரலாறு ஆகவேண்டும். எனது அஸ்தி பழவர்க்கங்கட்கு உரமாக வேண்டும்.

**கே : மனிதனுக்கு இரவிலும் கண் தெரிந்தால்?**

ப : நீதி மன்றுங்களை ஆகாயத்தில் கட்டவேண்டிய கஷ்டநிலை உண்டாகும்.

**கே : கொழும்பில் சில வீட்டுக் கேற்றுக்களில் நாயின் படத்தை வரைந்து கடிநாய் கவனம் என எழுதியுள்ளார்களே? இதற்கு என்ன அர்த்தம்.**

ப : நாய் தின்னாக் காசு தம்மிடம் உள்ளதை அவர்கள் பறை சாற்றியுள்ளார்கள்.

# பாகம் - 10
# நிறைவுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக் கருடன் பதில்கள்

# பகுதி 11

**கே : கருடா நீ கற்பனைக் கேள்விகள் கேட்டுப் பதில் அளிக்கிறாய்? உண்மையா இல்லையா?**

ப : *நீங்கள் தரமான கேள்வி கேட்காவிட்டால் கேள்வியும் நானே பதிலும் நானே ஆகிவிடுவேன். நான் படிதாண்டிப் பத்தினி வேஷம் போடுபவள் அல்ல!*

**கே : யாழ்ப்பாணத்தின் கலை இலக்கிய வரலாற்றில் வீழ்ச்சி ஏன்?**

ப : *இதயவீணை தூங்கும்போது பாடமுடியுமா?*

**கே : பாரதி பாடியபடி சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைத்திருந்தால் . . ?**

ப : *1) தமிழ் அகதிகள் கடல்கடக்க வேண்டிவந்திராது.*
*2) கச்சதீவுப் பிரச்சினை எழுந்தபோது இரண்டு பகுதியினரும் கல்எறிந்து விளையாடி இருப்பர்.*

**கே : இலங்கைக்கு வடிசாராயத்தை அறிமுகப்படுத்தியது யார்?**

ப : *சாராயத்தை அறிமுகப்படுத்தியது தெ. பிள்ளை. வடிசாராயத்தை அறிமுகப்படுத்தியது பிள்ளையின் தந்தை (பி.த.)*

**கே : ஆச்சரியத்துக்கும், கேள்விக்கும் தத்துவ விளக்கம் தருவாயா?**

ப : *! ஆச்சரியம் அடக்கமானது.*
*? கேள்வி வெட்டக்கூடியது.*

**கே: தோல்விகள் எல்லாம் வெற்றியின் அடையாளங்கள் என்கிறார்கள் உண்மையா?**

ப : *டாக்டரே அது உண்மையல்ல. வாழ்க்கை முழுவதும் தோல்வி அடைபவர்களும், வாழ்க்கை முழுவதும் வெற்றி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைபவர்களும் உண்டு. தோல்விக்கொள்கைக்கும் வெற்றிக்காலம் உண்டு. காலம் அறிந்து ஏறி, கால் இடறும் காலம் வரும் முன்பு இறங்கவும்.

**கே : இலங்கையின் இனப்பிரச்சினை தீராமைக்குக் காரணம் என்ன?**

ப : படித்தவர்கள் 85% வாழ்வதால்.

**கே : யாரை நம்பக்கூடாது?**

ப : கொழும்பில் சொந்த வீடு இருக்கும் போது வீட்டிற்கு வரும் உறவினர்க்கு "ஹோட்டல்" திசையைச் சுட்டிக் காட்டுபவரை நம்பக்கூடாது.

**கே : பேனா நண்பனை நம்பலாமா?**

ப : பேனா பிடிப்பவரின் மை, வாய்மையா..? பொய்மையா? என முதலில் அறியவும்.

**கே : பழைய பெயர்களை வைக்க நம்மவர்கள் விரும்புவது இல்லையே ஏன்?**

ப : அவர்கட்கு நியூ துச்சாதனன், நியூ துரியோதனன் வேண்டுமாம்.. நாம் என்செய்வோம் பராபரமே!

**கே : 83ம் ஆண்டுபோல கொழும்பு குழம்பினால் என்ன செய்வது?**

ப : அரகர சிவசிவ சம்போ..

**கே : மனிதன் பற்றி அறிஞர்கள் என்ன கருதினார்கள்?**

ப : *"Thinking Animal"* என அறிஞர்கள் சொன்னார்கள். நன்றியுள்ள நாயினையும் இணை பிரியாத அன்றிலையும், ஜோடியை மறவாத புறாவையும் யோசித்துப் பார்த்தால் மிருகங்களை அவனுடன் ஒப்பிடுவது பிழையெனப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : தமிழ்த் தினசரி ஏடுகள் தமிழன் உரிமைக்காகப் பாடுபடுகின்றனவா?**

ப : *நல்ல கேள்வி கேட்டீர்? பத்திரிகையாளர் சம்பள அளவுத் திட்டத்தின்படி ஆசிரியர் பீடத்தில் உள்ள அறிஞர்கட்குச் சம்பளம் கொடுக்காத இப்பத்திரிகைகளா தமிழனுக்காக எழுதுகின்றன?*

**கே : கருடா உண்மையாகவே நீ நாட்டுக் கருடன் தானா?**

ப : *இல்லை தம்பி... கற்பனைக் கருடன் உண்மையான நாட்டுக்கருடன் என்றால் கொம்பனியில் ௨ மைலுக்குப் பெட்டி தூக்க 500 ரூபா கொடுத்திருப்பேனா?*

**கே : "பள்ளித் தலம் அனைத்தும் கோயில் செய்குவோம்" எனப் பாடிய பாரதி இன்றிருந்தால்?**

ப : *கொழும்பு நகர் எங்கும்* "Hotel Inn" *திறப்போரைக் கண்டு ஆச்சரியம் அடைந்திருப்பார்!*

**கே : கம்பனையும் கண்ணதாசனையும் ஒப்பிடலாமா?**

ப : *கவிச்சக்கரவர்த்தியின் ஒரு சில கவிதைகள் வனவாசம். கவியரசர் கண்ணதாசனின் சொல் உழவு வனவாசம். விமர்சகர்கள் வாசகர்களைக்குழப்புகின்றார்கள்.!*

**கே : உங்களுக்கு இறகிருந்தால்?**

ப : *உண்மையான ஓவியனுக்கு அருகில் சென்று இறக்கையில் ஒன்றைப் பிடுங்கச் சொல்வேன்!*

**கே : எனது மூத்த மகனின் பெயர் குகன். அவன் தம்பிக்கு என்ன பெயர் வைக்கலாம்?**

ப : *குகன்தம்பி*

**கே : காலையில் காதல் வந்தால்?**

ப : *மாலையில் பாலை வரும்.*

**கே : எவன் பணத்தை மதிக்கிறான்?**

ப : *வெளிநாட்டுக் காசை வட்டிக்குக் கொடுப்பவன்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : வட்டி என்றொரு கடை இருந்தால்... ?**

ப : அடைவு என்றொரு நகை இருக்கும்



**கே : யார் ஏழை? யார் பணக்காரன்?**

ப : அடிக்கடி ஆஸ்பத்திரிபோகும் மனைவி வாய்த்தவன் ஏழை. மற்றவன் பணக்காரன்.

**கே : கருடா உனக்கு மரணம் எப்போது?**

ப : இப்படியும் ஒரு கேள்வியா? நான் ஒரு வினையெச்சம். பெயரெச்சம் காலாவதியாகி வினை முற்றிய அன்று கருடன் செயப்பாட்டுப் பொருளுக்கு வருவான்.

**கே : பஸ் டிக்கட்டுக்களின் கட்டணம் அதிகரித்தால்?**

ப : பம்பலப்பிட்டிக்கு டிக்கட் எடுத்து மொறட்டுவையில் இறங்கும் கூட்டம் அதிகரிக்கும்.

**கே : கருடா கண்ணுக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத ஒன்று எது?**

ப : தொலைக்காட்சியில் காண்பிக்கப்படும் அறுசுவை உணவு வகைகள்.

**கே : தமிழ்நாடு ஏழ்மையில் வாடக் காரணம் என்ன?**

ப : மரங்கள் வளரத் தண்ணீர் இல்லை. ஆனால் மனிதன் அழிய மலிவுத் தண்ணீர் உண்டு அங்கே!

**கே : மனித வாழ்க்கையின் முடிவு எப்படிப்பட்டது?**

ப : சுவாசித்த காற்றையும் ஒருநாள் வெளியேற்றிவிட்டே சாகவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : ஹோட்டல் காசாளர் பற்றிக் ஹோட்டலுக்குப் போனால் என்ன நினைப்பீர்?**

ப : *பாவம் எண்ணி எண்ணி லாச்சிக்குள் போடுகிறார். செலவழிக்க ஒரு நாளாவது நேரம் இருக்குமோ தெரியாது.. !*

**கே : மனிதனுக்கு நெற்றிக்கண் இருந்தால்?**

ப : *நெற்றிக் கண்ணைக் காப்பாற்ற "ஸ்பெஷல்" ஹெல்மட் அணியவேண்டிவரும்.*

**கே : தமிழன் ஏன் கறுப்பாகப் பிறந்தான்?**

ப : *அம்மாவை, அப்பா சனியன் என்று திட்டிக் கொண்டே பிள்ளையோ பிள்ளை எனப் பெற்றதால்!*

**கே : வீதி ஓரத்தில் போகும் ஏழைக்கு ஆத்திரம் வரக்கூடிய நிகழ்ச்சி எது?**

ப : *ஹோட்டலில் கொத்துரொட்டி வெட்டும் டாங் .. டாங் .. ஒலியும் ! அதன் மூக்கைத் துளைக்கும் காரமான மணமும்தான்.*

# பாகம்- 11
# நிறைவுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுக் கருடன் பதில்கள் — பகுதி 12

**கே : சனத்தொகைப் பெருக்கத்தால் நாடு பாதிக்கப்படுமா?**

ப : *தலையால் சிந்திப்போரால் பாதிப்பு இல்லை! வயிற்றால் சிந்திப்போரால் நிச்சயம் நாடு பாதிக்கப்படும்!*

**கே: வெளிநாட்டுப் பணத்தால் தமிழர் வாழ்வு உயர்ந்துள்ளதா?**

ப : *இல்லை. சீதனச்சந்தை விஸ்தரிக்கப்பட்டது தான் மிச்சம்!*

**கே: கருடா நாடு எங்கே போகிறது?**
**மக்கள் எங்கே போகிறார்கள்?**

ப : *நாடு உலக வங்கியை நோக்கிப் போகின்றது.*
*மக்கள் அகதிமுகாம் நோக்கிப் போகின்றார்கள்!*

**கே : கருடா கொழும்பில் குடியிருப்பு 20 வருடங்கட்கு முன்பு எப்படி? இப்போது எப்படி?**

ப : *இருபது வருடங்களுக்கு முன்பு இருந்த மாத வாடகையே இப்போது நாம் கொடுக்கும் நாள் வாடகை தம்பி!*

**கே : கருடா இலங்கைத் தொழிலாளர்களின் பொற்காலம் எது?**

ப : *தேநீர் ௫ சதம் விற்ற காலம் தம்பியே!*

**கே : யேசுநாதர் பேசினால் அவர் என்ன பேசுவார்?**

ப : *ஏழைகள் பெருகிக் கொண்டு போகும்போது நத்தார் நாளில் இத்தனை பட்டாசு சுடவேண்டுமா? என்று கேள்வி எழுப்புவார்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : இலங்கையின் இனப்பிரச்சினை தீரவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?**

ப : மதிலின்மேல் இருக்கும் அரசியல் பூனைகள் கீழே இறங்க வேண்டும்.

**கே: இலங்கையின் இனப்பிரச்சினை தீராமல் இருப்பது ஏன்? கவிதையில் பதில் சொல்?**

ப : வடக்கென்பார் கிழக்கென்பார்
இணைப்பென்பார் பிரிப்பென்பார்
வரும் என்பார் வராதென்பார்
தீர்ப்பென்றால் திகைத்திடுவார்

**கே : நாம் எதுவரை முன்னேற மாட்டோம்?**

ப : உள்நாட்டுச் சேவல் கூவும் நேரம் வெளிநாட்டுச் சுவர் மணிக் கூட்டைப் பார்க்கும் நிலைவரைநாம் முன்னேறமாட்டோம்.

**கே : சுவீப் விழுவதற்கான ஆலோசனைகள் சொல்பவரை நம்பலாமா?**

ப : அவரின் ஆலோசனையின்படி, அவருக்கே முதல் பரிசு விழச்செய்யுமாறு வற்புறுத்தவும், அடியடா புறப்படலை யிலை.

**கே : மட்டக்களப்பில் பிடித்தது எது? பிடியாதது எது?**

ப : பிடித்தது கஜு. பிடிக்காதது கிசு . கிசு.

**கே :அன்புக்கும் உண்டா அடைக்கும் தாள்?**

ப : அன்புக்கு அடைக்கும் தாள் இருந்தால் அகதி முகாம்களில் பிள்ளைகள் பிறப்பார்களா?

**கே : சங்கீதம் அறிந்த பெண்ணை இசைஞானம் அறியாதவன் கல்யாணம் செய்தால்?**

ப : சந்தேகப் பூ மலரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : வாழ்க்கையில் இலட்சியம் எதுவும் இன்றி வாழ்வோர் எதனைக் கண்டார்கள்?**

ப : *சூரியோதயத்தையும், சூரிய அஸ்தமனத்தையும் கண்டார்கள்.*

**கே : அர்த்தம் உள்ள இந்துமதத்துக்கு நாம் செய்தசேவை என்ன?**

ப : *"மாட்டிறைச்சி" சாப்பிடாதீர் என அமெரிக்க இந்துத்துறவி தந்திரதேவா சொல்லும் அளவுக்குச் சேவை நடந்துள்ளது.*

**கே : குவைற் ஆக்கிரமிப்புக்கு அமெரிக்கா கண்ணீர் வடித்தது ஏன்? பொஸ்னியாவில் கண்ணீர் வடியாதது ஏன்?**

ப : *குவைற்றில் தலையிட்டமைக்குக் காரணம் எண்ணெய்க் கண்ணீர்.*

*பொஸ்னியாவில் தலையிடாமைக்குக் காரணம் முஸ்லீம் கண்ணீர்.*

**கே : கொழும்பில் வாடகைக்கு இருப்போரை முதலாளிமார் அடிக்கடி குடி எழுப்புவது எதற்காக?**

ப : *புதிது, புதிதாக ஆட்கள் வந்தால்தான் ஏமாற்றிப் பிழைப்பது சுலபம் என்பது அவர்களின் கணித அலகு.*

**கே : தற்கொலைக்கு இலங்கை இரண்டாம் இடம் வகிக்கின்றது. நுளம்புத் திரிச்சாம்பலும், முள்ளுக்கம்பியும் கலந்த கசிப்பைக் குடித்த பின்பு மனைவியைக் கணவன் அடிக்கிறான். அவள் தற்கொலை செய்கிறாள். இதை மாற்ற வழி என்ன?**

ப : *நாட்டின் நாணயத்தில் ஆணி செய்தவர்கள் எமது மக்கள். எனவே கசிப்பைக் குடியாதுவிடின் கசிப்பு வடிப்பவர்கள் கலைந்து போவார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : ஜப்பானியருக்கும் எமக்கும் என்ன வித்தியாசம்?**

ப : *நாம் வானவில்லிற்கும் இராமர் வில்லிற்கும் கவி பாடுகின்றோம். அவர்கள் வானவில் நிறங்களில் எமக்குச "சாறி"நெசவு செய்து அனுப்புகின்றார்கள்.*

**கே : மனிதனுக்கும் மிருகத்துக்கும் என்ன வித்தியாசம்?**

ப : *மிருகம் சிகரெட் குடிப்பது இல்லை.*



**கே :தலைவன் என்றால் எப்படி இருக்கவேண்டும்.**

ப : *நீதிக்கு அவர் தலை வணங்க வேண்டாம். அவர் செயலால் நீதி அவருக்குத் தலை வணங்கவேண்டும்.*

**கே : தீர்க்க முடியாத பிரச்சனையைத் தீர்ப்பது எப்படி?**

ப : *விசாரணைக் கமிஷன் அமைக்கலாம்.*

**கே : இலங்கையின் உள்நாட்டுப்போர் முனை எப்படி உள்ளது?**

ப : *பூநகரியில் தாக்குதல் நடந்தால் யாழ்ப்பாணக் கச்சேரியில் குண்டுவிழும்.*

**கே : சமுதாயத்தில் பலவீனப்பட்டோரை நசுக்குபவர்களை மன்னிக்கலாமா?**

ப : *இடியுடன் கூடிய மின்னலைக் "கூலிங் கிளாஸ்" போட்டு ரசிக்கலாமா?*

**கே : உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடலாமா?**

ப : *ஊர்வாயை மூடினால் உலைவாய் தம்பி .. உலைவாயை மூட ஒரு மூடி காணும், ஊர் வாயை மூட அம்மாடி...*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள் என்றால் என்ன அர்த்தம்?**

ப : இரண்டு நாள் கஸ்டப்பட்டு உழைத்தால் ஒருநாள் பெண்டாட்டியுடன் சமாதானமாக வாழலாம் என்பதே!

**கே : உமக்கு எந்த மதம் பிடிக்கும்? எந்த மதம் பிடியாது?**

ப : எனக்கு எல்லா மதமும் பிடிக்கும். ஆனால் சர்வமதக் குழறல்கள் எனக்குப் பிடிக்காது.

**கே : கொழும்பு தொழில் முன்னேற்றம் கண்டுள்ளதா?**

ப : ஹா.. ஹா.. டூப்ளிகட் சாவி செய்வதில் முன்னேற்றம் கண்டுள்ளார்கள்.

**கே : கொக்கு ஒற்றைக் காலைத் தூக்குவது ஏன்?**

ப : மூளை பலம் உள்ளவர்கட்கு ஒரு கால் சாதனை செய்யும் என்பதைக் காட்ட!

**கே : சிவபூசையில் கரடி புகுந்தால்?**

ப : பூசையில் கரடி மாத்திரம் நிற்கும். மூலஸ்தானத்தில் ஐயர் கதவைப் பூட்டிவிட்டு நிற்பார்.

# பாகம் - 12 நிறைவுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பகுதி 13

**கே : இன்று பெண்ணா, பொன்னா முக்கியம்.**

ப : *பொன்னு உள்ள பொண்ணு*

**கே : பேய் இருப்பது உண்மையா?**

ப : *Boy நீ ஒரு பேய்!*

**கே : உமக்கு அடுத்த ஆண்டில் தமிழ்மணி பட்டம் சிபார்சு செய்கிறேன் ஏற்பீரா?**

ப : *தமிழ் என்னுடன் உள்ளது. Money இல்லை. அனுப்பி வைத்தால் ஏற்பேன்.*

**கே : நாம் ஏன் பிறந்தோம்?**

ப : *வாடகை, கப்பம் என்பன ஒழுங்காகக் கட்ட!*

**கே: கொழும்பில் தமிழர்கள் என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள்?**

ப : *பிரான்ஸ், இங்கிலாந்து, கனடா போன்ற உலக நாடுகளுக்குக் கரியமலவாயு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.*

**கே : உண்மையான கஞ்சனைக் கண்டு பிடிப்பது எப்படி?**

ப : *அவன் சீதனம் கொடுப்பான்.; பிச்சை கொடுக்க மாட்டான்.*

**கே : கொழும்பில் உமக்குப் பிடித்தது எது? பிடியாதது எது?**

ப : *பிடித்தது வேல்விழா. பிடியாதது அம்புலன்ஸ் அலறும் சத்தம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே: கொழும்பில் தமிழ் மக்கள் குவிந்து வருவதாக அரசியல்வாதிகள் ஆலாபனை செய்வது ஏன்?


ப : கொழும்புத் தீர்ப்பே தீர்ப்பு. மற்றெல்லாம் செழும்புத் தீர்ப்பு என்கின்றார்கள்.

கே : இன்று எந்தத் தாய் கொடுத்து வைத்தவள்? எந்தத் தாய் கொடுத்து வைக்காதவள்?

ப : கனடாவுக்குப் பிள்ளையை அனுப்பியவள் கொடுத்து வைத்தவள். நித்திரையால் எழும்ப முன்பு "சுப்பர் சோனிக்" விமானத்தால் கொல்லப் பட்ட பிள்ளையின் தாய் கொடுத் து வைக்காதவள்.

கே : அதிர்ஷ்டசாலியான மருமகன் யார்?

ப : மாமனார் சட்டம்பியாராக வராத குடும்பத்தில் கல்யாணம் செய்த மருமகன்.



கே : ஒரு ஆணின் முன்னேற்றத்துக்கு ஒரு பெண்ணின் தியாகம் பின்னே உள்ளது. இதனை ஏற்பீரா?

ப : ஒரு பெண் அல்ல அவ்வாறு பல பெண்கள் உள்ளார்கள். பல ஆணிகளின் முக விலாசத்தை மறைத்த பெண்களும், ஓர் ஆணின் பின்னே நின்றார்கள், நிற்பார்கள் என்பதையும் நீர் உணர்வீரா?

கே : உம்மைக் கவர்ந்த சிரிப்பு நகைச்சுவை ஒன்று சொல்க?

ப : உப்புத் தண்ணியில் வளர்ந்த மீனுக்குக் கறிச்சட்டியில் உப்புப்போடுவது எனக்குச் சிரிப்பை வரவழைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : எந்த நாடு சமசந்தர்ப்பம் இல்லாத நாடு?**

ப : பக்கத்து வீட்டில் இறைச்சித்தூள் இடித்துச் சத்தம் கேட்கும்போது அடுத்த வீட்டில் பட்டினி கிடக்கும் நாடு.

**கே : தலைவலிக்கு மறுபெயர் என்ன?**

ப : நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப்பதவி.

**கே : அந்தக் காலத்தில் உடன்கட்டை ஏறும் பெண்கள் இருந்தார்கள்! இப்போது . . ?**

ப : இப்போது உடன்கட்டை எடுக்கும் பெண்கள் நாட்டில் இருக்கவே செய்கின்றார்கள்.



**கே : இலங்கை மக்களின் புத்தி எப்படிப்பட்டது?**

ப : ரபர் கொடுத்து ரயர் வாங்கும் புத்தி, இல்மனைட் கொடுத்து கண்ணாடி வாங்கும் புத்தி, பொல்லுக் கொடுத்து அடிவாங்கும் புத்தி. போதுமா?

**கே : அழகான உடை உடுத்துச் சமுதாயத்தை ஏமாற்றுபவர்கள் பற்றி என்ன கருதுகின்றீர்கள்?**

ப : அழகான போக்கிரி எனக் கருதுகின்றேன்.

**கே : அரசாங்கத்திற்கு வெட்கக்கேடு எது?**

ப : போரால் அழிந்து கொண்டிருக்கும் வடபகுதி மாணவர்கட்குத் தரப்படுத்தல் போடுவது.

**கே : கடவுள் எப்போது சிரிக்கின்றான்?**

ப : நேரத்தை மதிக்காதவன் மணிக்கூடு கட்டும் போது இறைவன் சிரிக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : இன்று சோசலிஷசம் பேசுவதற்கு இளைஞர்கள் முன் வராமைக்குக் காரணம் என்ன?**

ப :அவர்கள் பல்கலைக்கழகத்தில் படிக்கும் மட்டும் பேசிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். பணக்காரப் பெண்டாட்டி கிடைத்ததும் சோசலிஷம் பேச அவர்களுக்குப் பைத்தியமா? உமது பெண்டாட்டி ஏழை போலை! ஹீ.. ஹீ

**கே : நாளைக்கும் நிலவு வரும் நாம் இருக்கமாட்டோம். நாளைக்கும் பூ மலரும் நாம் இருக்கமாட்டோம். இந்தப் பாணியில் உம்மால் ஒரு பாடல் பாட முடியுமா?**

ப : நாளைக்கும் நிலவுவரும் நாம் இருந்து பார்ப்போம்.
நாளைக்கும் பூ மலரும் நாம் இருந்து பார்ப்போம்.

**கே : மை டியர் கருடன்! தற்கால நவநாகரீக உலகில் சினிமா நடிகர்களுள் தங்களுக்குப் பிடித்த நடிகர் யார்? நடிகை யார்? பழங்காலத்து நடிகை யார்? நடிகர் யார்? பதிலைக் கவிதையில் சொல்?**

ப : நவஉலகில் கமலஹாசன், நடிகையானால் குஷ்பு,
பழங்காலம் என எடுத்துரைத்தால்
பட்டியலோ நீண்டு செல்லும்
பட் பட் எனப் பதில் சொன்னால் படவுலகம் கெம்பி எழும்
கிட்டப்பா. வீரப்பா, பகவதர், சந்திரபாபு இவர்களெல்லாம்
என் ரசிகர் இது மட்டோ?
“சந்திரலேகா” ராஜகுமாரி, அடுத்தாற்போல் பத்மினியாம் . ..
சமகாலச் சாவித்திரியாம் என் ரசனை அறிந்திடுவாய்!
எட்டடியாம் என் கவிதை நிறுத்துகின்றேன் கவிதை மழை.

**கே : பாலைவனத்தில் குடியேறிச் சந்தோசமாக வாழமுடியுமா?**

ப : பாலைவனத்தில் சந்தோசமாக வாழ முடியும் என முதல் குடியேற்றம் அமைத்தவர் முதல் இஸ்ரவேல் பிரதமர் பென்குரியன். உங்க பொண்டாட்டி தியாகி என்றால் இமயமலை முடியிலும் சந்தோசம் மலரும். சகராப் பாலைவனத்திலும் சந்தோசப் பூ மலரத்தான் செய்யும். ரேக் இற் ஈசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : உலகில் கஷ்டமானது எது?**

ப : பிரிந்த குடும்பத்தையும் ஒன்று சேர்க்கலாம். இரண்டு பத்திரிகையாளர்களையும் ஒன்று சேர்ப்பது கஷ்டமானது.

**கே : இந்த உலகின் நிலை எப்படிப்பட்டது?**

ப : இந்த உலகிலே வானமும் பொய்க்கும், வாய்மையும் பொய்க்கும், அதுவே உலகின் இன்றைய நிலை.

**கே : கருடா எமது ரூபவாஹினியில் ஒளிபரப்பாகும் ஆங்கில நிகழ்ச்சிகள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு ஒளிபரப்பாகிறதே ஏன் தமிழிலும் மொழிபெயர்த்தால் என்ன?**

ப : தமிழ் பேசுவோர் எல்லோரும் ஆங்கிலம் தெரிந்தவர்கள் என்று சொல்லாமல் சொல்கிறார்கள். பிறகு எதற்குக் கோபி மொழிபெயர்ப்பு? சேட்கொலரை உயர்த்திவிடு.

**கே : அரசாங்கத்துக்கு வெட்கக்கேடு எது?**

ப : போரால் அழிந்து கொண்டிருக்கும் வடபகுதி மக்களுக்குத் தரப்படுத்தல் போடுவது.

# பாகம் - 13
# நிறைவுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக் கருடன் பதில்கள் — பகுதி 14

**கே : இலவசமாகக் கிடைத்தால் அதனைப் பெற்றுகொள்ள ஓடும் மனிதர்கள் இலவசமாக எதனைக் கொடுத்தால் திரும்பி ஓடுவார்கள்.**

ப : *எயிட்ஸ்... ஹ... ஹ...*

**கே : சமீபத்தில் நீங்கள் பத்திரிகையில் கண்டு ரசித்த தன்மான நிகழ்ச்சி எதனையும் கூறமுடியுமா?**

ப : *ஆமா.. தொரே.. அரசாங்கம் கொடுத்த ஜனசவிய உதவியை 8 வேடுவ குடும்பங்கள் நிராகரித்து உள்ளன! மாடிக்கட்டிடத்தில் வாழ்ந்து கொண்டு கூப்பன் முத்திரை வைத்திருக்கும் மானம் கெட்டதுகளை இவர்களுடன் ஒப்பிட்டு ரசித்தேன்.*

**கே : நகைச்சுவையைப் பற்றித் தெரியாதவர்களை நாம் எவ்வாறு மதிக்கவேண்டும்?**

ப : *அவருக்கு இரண்டு பெரிய கொம்பு தலையில் இருப்பதாகக் கற்பனை செய்து நடக்க வேண்டும்.*

**கே: உங்களைச் சந்திப்பதற்கு ஒரு பத்திரிகை ஆசிரியர். எழுத்தாளர், விமர்சகர், நிருபர், ஓவியர் வந்தால் யாரை முதலில் சந்திப்பீர்?**

ப : *முதலில் வந்து இருந்தவரை!*

**கே: இலங்கையில் ஒரு பத்திரிகை ஆசிரியர்க்கும் எழுத்தாளர் களுக்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?**

ப : *இரண்டு பத்திரிகை ஆசிரியர்கள் ஒருபோதும் ஒற்றுமையாக இருந்தது இல்லை. எழுத்தாளர்கள் ஒருபோதும் ஐக்கியமாக வாழ்ந்ததில்லை இது ஒற்றுமை. பத்திரிகை ஆசிரியர் தலையில்லாத முதலாளிக்குக் கீழ் தலையுள்ள பேனையால் எழுதுவதால் தாலிக் கொடியை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவு வைக்கத் தேவையில்லை. எழுத்தாளர்கள் கௌரவத்திற்காக வாழ்வதால் எமது எழுத்துக்களைப் பிரசுரிக்கத் தாலிக் கொடியை அடவு வைப்பர். இது வேற்றுமை.

**கே: சந்தர்ப்பவாதம் என்றால் என்ன?**

ப :வவுனியாவிற்கு எண்ணெயைக் காட்டி ஏறாவூருக்குத் தண்ணியைக் காட்டுவது சந்தர்ப்பவாதம்.

**கே: சமீபத்தில் நீர் ரசித்த ஒரு பொன்மொழி சொல்லமுடியுமா?**

ப : வேலைக்காரனுக்கு உனது ரகசியத்தைச் சொன்னால் அவனை உனது எஜமான் ஆக்கிக்கொள்கிறாய் என ஆபிரகாம் லிங்கன் கூறினார். சமீபத்தில் இதனை நான் ரசித்தேன்.

**கே : ஒரு மனிதன் எருமையாவது எப்போது? பசுவாக இருப்பது எப்போது?**

ப : ரயிலில் சீற்பிடிக்கும்போது எருமையாகின்றான். சீற் பிடித்த பின்பு பசு ஆகின்றான்.

**கே : ஒருவன் பொய் சொல்கிறானா எனப் பார்க்கும் மிசின் வந்துள்ளதாம்! மிசினுக்குள் இன்னும் வராத மிசின் எது?**

ப : காமுகர்களை இனம் காண்பதற்கு மிசின் தேவை.

**கே : குரங்கில் இருந்து மனிதன் பிறந்தான் என்பதை நிருபிக்க முடியுமா?**

ப :முடியும். மரத்திலிருந்து விழுந்தகுரங்குக்குட்டியைக்குரங்கு ஏற்பது இல்லை. ஒரு சாதியில் இருந்து மறுசாதிக்குச் சென்றவனை மனிதன் ஏற்பதில்லை. இதுகுரங்கிலிருந்து பெற்றகுணம்தானே வராதா?

**கே : நாட்டிற்குத் தலைவராகவும், சமூகத்தொண்டராகவும் இருந்தவரை நாம் எவ்வாறு மதிக்கின்றோம்?**

ப : முத்திரை அடித்து முகத்தில் சீல்குத்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : இங்கிலாந்தில் எம்மவர்கள் அழுவது எப்போது? சிரிப்பது எப்போது?**

ப : *வடக்குக் கிழக்கில் வாழும் தாய் தந்தையரைக் கனவில் கண்டால் சிரிப்பர். வீதியோரம் நீக்ரோவைக் கண்டால் அழுவர்.*

**கே : மனிதனுக்கும் மிருகத்திற்கும் என்ன வித்தியாசம்?**

ப : *மிருகம் இரைமீட்கும். மனிதன் கோபத்தை மீட்பான்.*

**கே : கடவுளின் படத்தை எங்கே வைக்கவேண்டும்.**

ப : *கூட்டுறவுக் கடைத் தராசின் நடு நெம்புகோலில் வைக்கவேண்டும்.*

**கே : எங்களுக்குத் தெரிந்தது எது? தெரியாதது எது?**

ப : *நூறு வருடங்கள் வாழப் போகிறோம் என நினைத்து நாலு தலைமுறைக்குப் பொருள் சேர்க்க எமக்குத் தெரியும். ஒவ்வொரு நாளும் சுடலையை நோக்கிச் செல்கின்றோம் என்பது எமக்கு புரியாத ஒன்று.*

**கே : அகதி முகாமைப் பார்த்தால் எமக்குத் தெரிவது என்ன?**

ப : *அவர்கள் "வோட்" உள்ள அகதிகள் எனத் தெரிந்து கொண்டேன்.*

**கே : தொழிலாளிக்கும் அறிவாளிக்கும் என்ன வித்தியாசம்?**

ப : *தொழிலாளி கைகட்டி வாழ்க்கை நடாத்துகின்றான். அறிவாளியோ "ரை" கட்டி முரண்பாட்டை வளர்க்கின்றான்.*

**கே : அண்ணா ஒரு விரல் காட்டியது ஏன்? எம்.ஜி.ஆர் இரண்டு விரல் காட்டியது ஏன்?**

ப : *நான் இருக்கும் மட்டும் தி.மு.க. ஒரு கட்சி என அண்ணா ஒரு விரல் காட்டினார். நான் கட்சியை இரண்டாகப் பிளந்து விட்டதாக எம்.ஜி.ஆர் இரண்டு விரல் காட்டினார் போலும்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : கருடா உனக்குச் சோதிடம் கொஞ்சம் தெரியுமாமே. நான் கல்யாணம் செய்யப் போகிறேன். ஏதும் அறிவுரை சொல்வாயோ?**

*ப : அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் ஒற்றுமையாக வாழ்வதில்லை. அடுத்த வீடு போல் ஒட்டிக்கிடக்கும் இராசியைச் சேர்ந்த பெண்ணும் உன்னுடன் ஒற்றுமையாக வாழமாட்டாள். கன்னியைக் கையில் பிடிக்குமுன்பு நல்ல ராசியைப் பிடி.*

**கே: அன்பளிப்பு என்பதை வைத்து அர்த்த புஷ்டியாக ஒரு வசனம் சொல்லமுடியுமா?**

*ப : வருமானத்தை எதிர்நோக்கித் தன்மானத்தை விற்போர் அடிக்கடி அன்பளிப்புக்களை எதிர்பார்ப்பார்.*

**கே : பள்ளிவாசலுக்கும் கோயிலுக்கும் என்ன வித்தியாசம்?**

*ப : பள்ளிவாசலில் ஆறுகால வழிபாட்டுடன் தங்கும் வசதியும் உண்டு. கோயிலில் மூன்று வேளைப்பூசையுடன் கேற் லொக் அப்!*

**க : பெரும்பான்மை மக்களைச் சுற்றிப் படரும் கொடிகள் சிறுபான்மையினர்என அதி உத்தம ஜனாதிபதி பேசியுள்ளார். இது சம்பந்தமாக என்ன நினைத்தீர்?**

*ப : பெரும்பான்மைச் சிங்களச் சகோதரர்கள் போகும் போது தோளில் ஏறிக் குந்தியிருக்க வேண்டும் என யோசித்தேன். ஹா..ஹி*

**கே : இலங்கை வானொலியின் நற்சிந்தனைகள் பற்றி என்ன நினைக்கின்றீர்?**

*ப : இஸ்லாம், கிறிஸ்தவம், சைவம் என நற்சிந்தனைகளை மூன்றாகப் பிரித்து ஒலிபரப்பி நாட்டை மூன்றாகக் காலையிலேயே பிரித்து விடுகின்றார்கள். நற்சிந்தனை ஒன்று தான் என்பதை அவர்கள் உணர்வதில்லையே!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே : ஒரு ஆசிரியர் என் மீது அடிக்கடி ஒரு மாதிரியாகப் படிப்பிக்கின்றார் . . என்ன செய்வது?**

ப : *வேறு விதமாகப் படிப்பித்தால் அன்றித் திருந்தமாட்டார் என நினைப்பின், பாடசாலைக்கு வெளியே வழியில்லாமலா போகும். நேரடி நடவடிக்கை அவசியம்.*

**கே: கருடா உன்னைத் திருடா எனக் கூப்பிட்டால் கோபிப்பாயா?**

ப : *நான் பறப்பதே திருடத்தானே.. கோவித்து என்ன பயன்!*

# பாகம்- 13
# நிறைவுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுக் குருடன் பதில்கள் — பகுதி 15

**கே: சுவாமி விபுலானந்தரிடம் உமக்கு ஈடுபாடு உண்டா? அவ்வாறாயின் அவர் கூற்றில் ஒன்றை எடுத்து விடுக....**

ப : *எம்மை எதிர்ப்பவர்கள் எல்லோருமே மகாத்மாக்களா? அவர்கள் மகாத்மாக்களாக இருப்பார்களாயின் எங்கள் குறைகளையா எடுத்துக் காட்டிக் கொண்டிருப்பார்கள்? இவ்வாறு சுவாமி விபுலானந்தர் எழுதியது எனக்கு நன்கு பிடித்துள்ளது.*

**கே : திண்டுக்கள் லியோனியின் நகைச்சுவை உங்களுக்குப் பிடிக்குமா?**

ப : *பிடிக்கும்: மெத்தப் பிடிக்கும்: பித்துப்பிடித்தவர்களையும் சுத்திப் பிடிக்கும். உலகம் எல்லாம் சென்று தமிழில் நகைச் சுவை வழங்கி, வசதியாக வாழலாம் என்ற துணிவுடன் ஓடுகிறாரே அதுவும் ரொம்ப... ரொம்பப் பிடிக்கும்.*

**கே: நல்ல தேனுக்கும், போலித்தேனுக்கும் என்ன வித்தியாசம்?**

ப : *நல்ல தேன்...வண்டு வாய் வைத்தது. போலித்தேன் குடிப்பவரின் வாயைச் சுட்டது!*

**கே: இலங்கையில் பேசாத் தமிழன் யார்? பேசும் தமிழன் யார்?**

ப : *பேசாத் தமிழன் புதைகுழியில் புதைக்கப்பட்டவன்! பேசும் தமிழன் கண்ணிவெடி அகற்றுபவன்.*

**கே: சதீஷ்.. நம்பியாரின் அறிக்கை யாழ்ப்பாணத்தில் மீள் குடியேற்றத்துக்கு வழி சமைக்குமா?**

ப : *வழியைச் சமைக்கும் எனத் தெரிகிறது.*

**கே: இன்றும் பிரதேசவாதம் பேசும் தமிழனை என்ன செய்வது?**

ப : *பிறதேசம் அனுப்புவது மிகவும் நல்லது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: தமிழனுக்கு எதிர்காலம் இன்னும் வெளிச்சமாக வராமைக்கு என்ன காரணம்?**

ப : காலம் எதிர் நிலையில் இப்போதும் இருக்கிறது.

**கே: உமக்கு யாரைக் கண்டால் பிடிக்காது?**

ப : உழைக்கும் கைகளால் பிச்சை எடுத்து, வாயைத் திறந்து மதுசாரம் ஊற்றும் மாமடையன்.

**கே: நிலவை விடக் குளிர்ச்சியானது எது?**

ப : நிலவில் கிடைத்த இன்பம்.

**கே: வாரியாரின் நகைச்சுவைச் சொற்பொழிவில் நகைச்சுவையாக இரண்டு வசனங்கள் கூறுக பார்க்கலாம்?**

ப : மதுரை வண்டியில் நீ ஏறில் மதுரைக்குப் போகலாம்; மதுரை வண்டி உன்மீது ஏறினால் சிவனடி போகலாம்!

**கே: முதலாளி, தொழிலாளி இருவரும் சமமாகக் கை கோர்ப்பது சாத்தியமா?**

ப : ஆம்... கையுறை இருப்பின்சாத்தியமோ சாத்தியம்!

**கே: அமெரிக்க ஜனாதிபதி புஷ் உலகப் படத்தைப் பார்த்தால் என்ன நினைப்பார்?**

ப : சிறிய நாடுகளைப் பார்த்து கை உறை என நினைப்பார். பெரிய நாடுகளைப் பார்த்துக் கால் உறை என நினைப்பார்.

**கே: ஈராக்கின் இன்றைய நிலைய மகாத்மாகாந்தி வந்து பார்த்தால் என்ன நினைப்பார்.**

ப : அகிம்சை என்ற சொல்லுக்கு நிரந்தரமாக 'அ' என்ற எழுத்து அழிந்துவிட்டதை நினைத்து அழுவார்.

**கே: ஈராக்கிய முன்னாள் அதிபருக்கு எது தெரியும்? எது தெரியாதது?**

ப : இருப்புப்பாதை போல் இரக்கத் தெரியும்; நாணற்புல் போல் படுக்கத் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: இன்றைய காலகட்டத்தில் இல்லானை இல்லாள் வெறுப்பது எதற்காக?**

ப : இல்லாளிடம் இல்லாதன இல்லை இளங்குமாரா என்ற தத்துவத்துடன் இல்லற வாழ்க்கையில் இணைந்து இல்லாதவனாக ஆகிவிட்டதால்!

**கே: சோம்பேறி ஆண்களுக்கு இடிபோல் விழுந்தது என்ன...?**

ப : நம்பியிருந்த சில கொமர்ப் பெண்கள் போராளிகளாய் இணைந்தது சோம்பேறி ஆண்களுக்கு இடியாய் விழுந்துவிட்டது.

**கே: தமிழன் எப்படி இருக்கக்கூடாது? எப்படி இருக்கவேண்டும்?**

ப : தலைமறை காயாகத் தமிழன் இருக்கக்கூடாது; இலைமறை காயாகச் சில சந்தர்ப்பங்களில் இருக்க வேண்டும்!

**கே: இசையால் வசமாகா இதயமெது?**

ப : வசையால் வாடிப்போன உள்ளமது.

**கே: நெருப்பைவிடச் சூடானது எது?**

ப : பசியின் கொடுமை

**கே: இன்பம், துன்பம் இரண்டும் உன் வீட்டுக்கு வந்து பிச்சை கேட்டால் யாருக்கு முதலில் பிச்சை போடுவீர்?**

ப : இன்பத்தையும், துன்பத்தையும் உள்ளே கூப்பிட்டு இன்பம் துன்பத்துக்குப் பிச்சைபோடுமாறு கூறுவேன்!

**கே: மாமியார், மருமகள் உறவு எப்படி இருக்க வேண்டும்?**

ப : மாமி யார்? என்ற கேள்விக்கு விடை கண்டுபிடிக்கும் முயற்சியாக இருக்ககூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: கணவன், மனைவி உறவு எப்படி இருக்கவேண்டும்?**

ப : நான் உனக்காக எனக் கணவன் மனைவியின் கதையைப் பேசவேண்டும். நீங்கள் எனக்காக என மனைவி கணவன் கதையைப் பேச வேண்டும். தாய், தந்தை கதையைக்குழந்தைகள் குதூகலமாக நினைவு கூர வேண்டும்.




## முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவைத்திரள் என்ற நகைச்சுவைச் சஞ்சிகை மட்டக்களப்பு மண்ணில் இருந்து வெளிவந்த நகைச்சுவைச் சஞ்சிகை. இந்தச் சஞ்சிகையின் வாயிலாக பல நல்ல கேள்வி பதில்களை நாட்டுக் கருடன் என்ற தலைப்பில் வெளியிட்டு வந்தவர் திக்கவயல் சி. தர்மகுலசிங்கம் அதில் சில பகுதிகளை நாட்டுக்கருடன் பதில் என்ற தலைப்பில் அவர் வெளியிடுவதையிட்டு களிப்பேருவகை கொள்கிறேன்

தமிழ் உலகில் கேள்வி பதில் பகுதிகளில் வெற்றியடைந்த குயுக்தியார், மகுடியார் போன்றவர்களைச் சுட்டிக்காட்டும் ஆசிரியர், இவர்களைத் தான் பின் தொடர்ந்து சொல்வதாகவும் குறிப்பிடுவது, இவரின் தன்னடக்கத்தன்மையைக் குறிப்பிடுகின்றது

ஆங்கில இலக்கியத்தில் ஒஸ்கார் வைல்ட் போன்றவர்கள் அழகிய ஆங்கிலத்தைக் கையாண்டு ஒரு புரட்சியைச் செய்தது போல் இக்கேள்வி பதில் மூலம் "திக்கவயல்" அவர்கள் ஒரு பெரும் புரட்சியைச் செய்திருப்பதாகவே நான் கருதுகின்றேன்

'திக்கவயல் தர்மு' அவர்கள் ஒரு சிறந்த பத்திரிகையாளர். சுடர் ஒளி பத்திரிகையில் ஞாயிறு இதழில் அவருடன் வேலை செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. கடந்த 40 வருடங்களாகக் கலை, இலக்கிய சேவையில் அவர் செய்துள்ள சேவை மக்களை மகிழ்சிப் படுத்திய மகத்தான சேவையாகும்

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுப் பட்டதாரியான அவர் தொட்ட துறைகள் யாவும் துலக்கமாக மக்களுக்குப் புரிந்தது. வரலாறு, நகைச்சுவை, இலக்கிய விமர்சனம் இவரின் இந்த நூல் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்

'தமிழரசன்'
சுடரொளி ஞாயிறு
ஆசிரியர் பீடம்
85, ஜெயந்தி மல்லி
மாராய்ச்சி வீதி,
கொழும்பு-17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org